# காத்திருத்தலில் தேவ திட்டம்

Pr. Glady Paul

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! இம்மாதத்தில் நம்முடைய இயேசு ஜீவிக்கிறார் பத்திரிக்கையின் வாயிலாக உங்களோடுகூட கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு, வானத்தின் கீழிருக்கின்ற ஒவ்வொரு காரியங்களுக்கும் ஒவ்வொரு சமயமுண்டு. *There is a time for everything and a season for every activity under the heavens...* என்று பிரசங்கி 3:1ல் சொல்லப்பட்டுள்ளது. ஆண்டவர் தாம் செய்யத் தீர்மானித்திருக்கின்ற காரியங்களை நிறைவேற்ற ஒவ்வொன்றுக்கும் ஒரு காலத்தை நிர்ணயம் செய்து வைத்திருக்கின்றார் என்பதை இவ்வசனத்தின் மூலம் அறிகிறோம். நம்முடைய வாழ்க்கையில் நன்மைகளைப் பெற, ஆண்டவரின் சித்தம் நிறைவேற ஆண்டவர் குறித்த நேரத்திற்கு காத்திருப்பதைக் குறித்து உங்களுக்கு எழுத விரும்புகின்றேன்.

ரயில் நிலையத்தில் நீண்ட வரிசையில் நின்று டிக்கெட் எடுப்பது, வங்கிகளில் வெகுநேரம் காத்திருத்தல் இது போன்ற சூழ்நிலைகள் யாருக்கும் பிடிப்பதில்லை. காரணம் நாம் அவசரயுகத்தில் அதாவது ஜனங்கள் இயந்திரம் போல இயங்கும் காலத்தில் இருக்கின்றோம். எல்லாம் உடனடியாக நடக்க வேண்டும். கிடைக்க வேண்டும் என்று நினைக்கிறோம். இப்பொழுதெல்லாம் சமைத்து சாப்பிடக் கூட நேரம் செலவு பண்ண யாரும் தயாராக இல்லை. உடனடி சப்பாத்தி *(Instant Chapatti)*, உடனடி இடியாப்பம்*(Instant idiyappam)*, உடனடி காப்பி *(Instant Coffe)* இது போன்ற அனைத்து உணவுப் பொருட்களும் தயார் நிலையில் விற்கப்படுகிறது. சில நிமிடங்களில் உணவு தயாராகிவிடும். உதாரணமாக உடனடி சப்பாத்தி *(Instant Chapatti)* ஏற்கனே மாவைப் பிசைந்து, தேய்த்த நிலையில் பாக்கெட்டுகளில் கிடைக்கிறது. அதை நெருப்பில் வேக வைத்து உடனே சாப்பிடலாம். மணிக்கணக்கில் நேரம் செலவிடத் தேவையில்லை.

பல வேளைகளில் இதே மனநிலையில் ஆவிக்குரிய காரியங்களைப் பார்க்கிறோம். நம் வாழ்க்கையில் நடப்பது போல் ஜெபத்திலும் எல்லாம் உடனடியாக நம்முடைய வேகத்திற்கு நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். நம்முடையக் காரியங்களைச் செய்வதற்கு ஆண்டவர் குறித்திருக்கின்ற நேரம், நாம் எதிர்பார்க்கும் நேரத்திலிருந்து வேறுபடுகிறது.*(God's timing is different from our timing)* தேவனுடைய ராஜ்யத்தில் எப்பொழுதும் எல்லாம் உடனடியாக *(Instant)* நடப்பதில்லை. ஆனால், ஆண்டவர் தாம் குறித்திருக்கின்ற நேரத்தில் ஒவ்வொன்றும் நேர்த்தியாக நடக்கிறது.*(In Gods kingdom everything does not happen instantly all the time....but it happens according to God's Timing. And God in his Time he makes all things beautiful)*.

கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறது என்று 2 பேதுரு 3:8ல் கூறப்பட்டுள்ளது. இதைக் குறித்து ஒரு கதை உண்டு. ஒரு மனிதன் ஆண்டவரிடம் பேசினான். அப்பொழுது அவன் ஆண்டவரைப் பார்த்து ஆண்டவரே ஆயிரம்





# உள்ளம் திறந்து உங்களோடு...

Pr.S.ஜோசப் பாலச்சந்திரன்

ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கர்த்தர் நல்லவர் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. காரணம், நாம் படக்கூடிய பிரயாசங்களுக்கெல்லாம் அவர் பிரதிபலனைத் தருகிறார். ஒருவேளை நீங்கள் ஊழியத்தின் நிமித்தம் பல பிரயாசங்களைப் பட்டுக்கொண்டிருக்கலாம்... பலன் ஏதுமில்லாமல், சோர்வோடுகூட இந்த பத்திரிக்கையை வாசித்துக் கொண்டிருக்கலாம். என்னுடைய வாழ்க்கையில், நான் கண்ட உண்மையை உங்களுக்குச் சொல்லுகிறேன். ஊழியத்திற்காய் நாம் படக்கூடிய எந்தப் பிரயாசமாயிருந்தாலும், அதற்குத் தகுந்த பலனை ஊழியத்திலும், நம்முடைய வாழ்க்கையிலும், நம்முடைய சந்ததியினுடைய வாழ்க்கையிலும் அதைக் காணமுடிகிறது. கர்த்தர் என் உள்ளத்தில் போட்ட இந்த மாதத்திற்கான வாக்குத்தத்தத்தை உள்ளம் திறந்து உங்களோடு எழுதுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

1கொரி.15:58, **ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.**

பிரயாசம் என்றால், ‘‘ஊழியத்தின் நிமித்தம் நீங்கள் எடுக்கக்கூடிய சிறிய, பெரிய முயற்சிகள்’’. இன்னும் ஒரு விதத்தில் சொல்லப்போனால், ஊழியத்தில் நீங்கள் செய்யக்கூடிய உதவிகள் எனவும் பொருள்படும். இதை வாசித்துக் கொண்டிருக்கும் அருமையான தேவனுடைய ஊழியர்களே, தேவனுக்காய் நாம் ஓடும் ஓட்டம், ஒருநாளும் வீணாகாது. இதை வாசித்துக் கொண்டிருக்கும் சிலர் நீங்கள், உதவி ஊழியத்தில் ஈடுபட்டிருக்கலாம். நீங்கள் செய்யக்கூடிய ஊழியத்திற்குத் தகுந்த பாராட்டு, ஊக்கம் கிடைக்கவில்லையே என ஏங்கிக்கொண்டிருக்கலாம். நீங்கள் படுகிற பிரயாசத்தை கர்த்தர் அறிவார். அதே வேளையில், நீங்கள் படக்கூடிய பிரயாசம் ஒரு நாளும் வீணாகாது என்பதை நீங்களும் அறிந்திருக்க வேண்டும். மேலே சொல்லப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேற வேதத்தில் ஊழியத்திற்காய் பிரயாசப்பட்ட சில நபர்களைக் குறித்தும் அவர்கள் செய்த ஊழியங்களைக் குறித்தும் உங்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

### 1. ஊழியத்திற்காய் எலிசாவின் பிரயாசம்

2 ராஜா 3:11 ... எலியாவின் கைகளுக்குத் தண்ணீர் வார்த்த சாப்பாத்தின் குமாரனாகிய எலிசா... என வேதத்தில் அவருக்கு அறிமுகம் கொடுக்கப்பட்டுள்ளது. மூத்த ஊழியராகிய எலியா இந்த பூமியில் ஊழியம் செய்த நாளெல்லாம், எலிசாவின் ஊழியம் பரிசுத்தவானாகிய எலியாவின் கைகளுக்குத் தண்ணீர் வார்ப்பதுதான். இந்த ஊழியத்தை உண்மையாய் அவர் செய்ததினிமித்தம், எலியா எடுத்துக்கொள்ளப்படுமுன், உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று எலிசாவைப் பார்த்துக் கேட்டார். அதற்கு எலிசா, உம்மிடத்திலுள்ள ஆவியின்

வரம் இரட்டிப்பாய் வேண்டும் என அரிதானதைக் கேட்டுப் பெற்றுக் கொண்டார். இந்த உதவி ஊழியத்தில், அவர் பல நாட்கள் பலனுக்காகக் காத்துக்கொண்டே இருந்திருக்கலாம். எலியாவோடு கூட எலிசா கடைசியாய் நடந்து போகும்போது, தீர்க்கதரிசிகள் சிலர் அவரை அதைரியப்படுத்துகிறார்கள் (2 ராஜா.2:3). ஆனாலும் எலிசா சோர்ந்து போகவில்லை. எலியாவைத் தொடர்ந்து போகிறதைப் பார்க்கிறோம். இந்த ஊழியத்தில் அவர் எடுத்த பிரயாசத்தினால் கர்த்தர் அவரை வல்லமையாய் பயன்படுத்துகிறார். எலியா செய்த அற்புதங்களைப் பார்க்கிலும், எலிசா செய்த அற்புதங்கள் அனேகம் என்று நமக்குத் தெரியும். இதை வாசித்துக் கொண்டிருக்கும் அருமையான தேவனுடைய பிள்ளையே, பரிசுத்தவான்களுக்கு நீங்கள் செய்யக்கூடிய உதவி ஊழியத்தினிமித்தம், உங்களுக்குப் பலன் உண்டு. உங்கள் பிரயாசம் ஒருநாளும் வீணாகாது.

### 2. சுவிசேஷ ஊழியத்திற்கான பிரயாசம்

பிலி.4:2,3, கர்த்தருக்குள் பிரயாசப்பட்ட எயோதியாள், சிந்திகேயாள் என்று இரண்டு சகோதரிகளைக் குறித்துப் பவுல் தன்னுடைய நிருபத்தில் குறிப்பிடுகிறார். சுவிசேஷ ஊழியத்திற்காய் நாம் பிரயாசப்படும்போது, உடனே நமக்குப் பலன் கிடைக்காவிட்டாலும், பிர.11:1ன் படி ... அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்போம். பல ஆண்டுகளுக்கு முன்பதாக, காளையார் கோவில் என்ற ஊர் பேருந்து நிலையத்தில் சுவிசேஷக் கூட்டங்களை நடத்தினோம். இப்போது இருப்பது போல உதவிக்கு ஆட்கள் அன்று கிடையாது. தங்குவதற்கு வசதி இல்லாததால், பகலில் உஷ்ணவேளையில், பக்கத்திலிருந்த கோவிலின் நிழலில் ஒய்வெடுத்தோம். மாலை நேரத்தில் உற்சாகமாய் சுவிசேஷத்தை அறிவித்தோம். பின்னர் இரவில் கூட்டம் நடத்தின மேடையிலேயே படுத்துத் தூங்கினோம். அந்நாட்களில், அங்கே எங்களை ஆதரிக்க ஒரு சபையும் கிடையாது. அன்று சுவிசேஷம் அறிவித்ததினிமித்தம், இன்று பல சபைகள் அங்கே நிறுவப்பட்டிருக்கின்றன. மிகப் பிரபலமான சுவிசேஷகராகிய தந்தை. பெர்க்மான்ஸ் அவர்களின் “ஜெபத்தோட்டமும்” அங்கே உருவாகியுள்ளது. இன்று அந்தப் பகுதி வழியாய் நான் கடந்து செல்லும்போதெல்லாம் உள்ளத்தில் ஒரே சந்தோஷம். காரணம் கர்த்தருக்காய் காட்டின பிரயாசம் ஒன்றும் வீணாகவில்லை. ஆதலால் நீங்களும் சுவிசேஷ ஊழியத்தில் பிரயாசப்படுங்கள்.

### 3. சரீரப் பிரகாரமான பிரயாசம்

வெளி.2:3, என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன், என்று ஆவியானவர் எபேசு சபையைக் குறித்துச் சாட்சி சொல்லுகிறார். கர்த்தருடைய நாமத்தின் மகிமைக்காக சரீரப் பிரகாரமாய் நாம் அலையக்கூடிய அலைச்சல்கள் எல்லாவற்றையும் கர்த்தர் அறிவார். ஒருவேளை சபையாய் செய்யக்கூடிய சுவிசேஷ ஊழியமோ, விசேஷக் கூட்ட ஆயத்தங்களோ எதுவாயிருந்தாலும் கர்த்தரின் நாமத்துக்காய் நமது சரீர உழைப்பையும் கொடுக்க வேண்டும்.

### 4. ஊழியர்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய பிரயாசம் (மத்.10:41)

2 ராஜா. 4:9,10 சூனேம் ஊரில் இருந்த கனம் பொருந்திய ஸ்திரீயும் அவளுடைய புருஷனும், ஊழியக்காரராகிய எலிசாவை அன்போடு கூட ஏற்றுக் கொண்டு உபசரிக்கிறார்கள். எலிசாவுக்கு வேண்டிய வசதிகளையும் அந்த அறை வீட்டிலே ஏற்பாடு செய்தார்கள்.





அந்த சூனேமியாளுக்கு என்ன வேண்டுமென எலிசா கேட்கிறார். அவர்கள் சகல ஆசீர்வாதங்களோடும், ஐசுவரியத்தோடும் இருந்துவந்தார்கள். ஆனால் அவர்களுக்குப் பிள்ளை இல்லாதிருந்தது. எலிசா தீர்க்கதரிசனமாய், ஒரு பிராண உற்பத்திகாலதிட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக்கொண்டிருப்பாய் (வச.16) என்று கூறுகிறார். அவருடைய வார்த்தையின்படியே அவர்களுக்கு ஆண் குழந்தை பிறக்கின்றது. ஊழியர்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய பிரயாசத்தினிமித்தம் அவ்வீட்டிலிருந்த குறைகள் நிறைவானது. கர்த்தருக்காய் நீங்கள் படும் பிரயாசம் ஒன்றும் வீணாகாது.

### 5. கொடுக்கின்ற பிரயாசம் (மத்.10:42)

சீஷன் என்கிற நாமத்தினிமித்தம் சிறியவராகிய ஒருவருக்கு ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தால்கூட அதின் பலனை நிச்சயமாய் அடைவோம் என இயேசு சொல்லுகிறார். கர்த்தருக்காய் நாம் விதைக்க வேண்டும், தசமபாகத்தை சபையாகிய களஞ்சியத்திற்குக் கொண்டுவர வேண்டும். கர்த்தர் நமக்குக் கொடுக்கக்கூடிய பணத்தின் மூலம் கர்த்தரைக் கனப்படுத்த வேண்டும். மற்றும் நம்முடைய தாலந்துகள், நேரம் அதையும் கொடுக்க வேண்டும். இதுவும் கர்த்தருக்காய் படுகிற பிரயாசமே.

### 6. தியாகம் (மத்.19:27)

தியாகம் என்பது சில வேளைகளில் கொடுப்பது, சில வேளைகளில் கர்த்தருக்காய் இழப்பது. பேதுரு ஆண்டவரைப் பார்த்து, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமோ, எங்களுக்கு என்ன கிடைக்கும் எனக் கேட்கிறார். இந்தக் கேள்வி ஊழியர்களாகிய அநேகருக்கு, “நமக்கு, நம்முடைய பிள்ளைகளுக்கு என்ன கிடைக்கும் ?” என சிந்திப்பதுண்டு. நீதிமானுடைய சந்தியோடே கர்த்தர் இருக்கிறார். நம்முடைய பிள்ளைகள் ஒருநாளும் கஷ்டப்படப் போவதில்லை. ஆண்டவராகிய இயேசு பேதுருவை அழைக்கும்போது, அவர் தன்னுடைய வலையை, படகை விட்டு விட்டு வந்தார். ஆதலால் பேதுருவுக்கு தன்னுடைய எதிர்காலத்தைக் குறித்தும், குடும்பத்தைக் குறித்தும் கேள்வி இருந்திருக்கிறது. ஆனாலும் நம்முடைய ஆண்டவர் எவ்வளவு இரக்கமுள்ளவர்... பேதுருவின் கேள்விக்கு, “இம்மையிலும் பலனுண்டு, மறுமையிலும் நூறத்தனையான பலனுன்டு” எனக் கனிவாய் பதிலளிக்கிறார்.

### 7. பிரயாசத்திற்கான பலன்கள்

பிலி. 4:2,3ன்படி, ஜீவ புஸ்தகத்தில் பிரயாசப்படுகிறவர்களுடைய நாமங்கள் எழுதப்படுகிறது. மத்.19:28 படி, இயேசுவின் சீஷர்களுக்கு 12 கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிற சிங்காசனங்களில் வீற்றிருப்பீர்கள் என்று சொல்லுகிறார். மல்.3:10ன் படி, கொடுக்கிற தேவ பிள்ளைகளுக்கு, வானத்தின் பலகனிகளைத் திறந்து இடம்கொள்ளமல் போகுமட்டும் ஆசீர்வதிப்பார்.

ஆதலால் இதை அறிந்து நம்முடைய ஊழியத்தில் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும் இருந்து பெருகுகிறவர்களாயிருப்போமாக. நம்முடைய பிரயாசத்திற்கான பிரதி பலன் நிச்சயம் உண்டு.

**கர்த்தர் தாமே உங்களை அசீர்வதிப்பாராக. ஆமென்.**

கிறிஸ்துவின் பணியில்

(பாஸ்டர். **S.ஜோசப் பாலசந்திரன்**)

சொல்லப்பட்டபடி பரிசுத்த ஆவியின்
பெலனைப் பெற்றுக்கொண்டார்கள்.
அதன்பின் முன்பு போல் அல்ல அவர்க
ளுடைய வாழ்க்கை, சுபாவம் எல்லாம்
முற்றிலும் மாறிவிட்டது.

சாதாரண மனிதர்கள் அசாதார
ணமான மனிதர்களானார்கள். தேவனு
டைய வல்லமையை உடையவர்களா
னார்கள். அதன் பின் அப்போஸ்தர்
களின் வாழ்க்கையைப் பார்க்கும்போது,
ஆண்டவர் அவர்கள் மூலமாய் செய்த
காரியங்கள் ஆச்சரியப்படத்தக்கதாயி
ருந்தது. சாதாரண மீனவனாயிருந்த
பேதுருவின் முதல் பிரசங்கத்தின்
மூலம், ஏறக்குறைய **3000** பேர் இரட்
சிக்கப்பட்டதை அப்.**2:41**ல் வாசிக்கி
றோம். அப்போஸ்தலர்களாகிய பேதுரு
வும், யோவானும் பிறவிச் சப்பாணியை
சுகப் படுத்தினதை அப். **31–11** வசனங்
களிலும், அப்போஸ்தலருடைய கைக
ளினாலே அநேக அடையாளங்களும்,
அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே
செய்யப்பட்டது. திரளான புருஷர்களும்
ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களா
கிக் கர்த்தரிடமாக அதிகமதிமாக
சேர்க்கப்பட்டார்கள். பிணியாளிகளைப்
படுக்கையின் மேலும் கட்டில்களின்
மேலும் கிடத்தி, பேதுரு நடந்து
போகை யில் அவனுடைய நிழலாகிலும்
அவர்க ளில் சிலர் மேல் படும்படிக்கு
வீதிகளில் கொண்டு வந்து
வைத்தார்கள் என்று அப். **5:12–16**
வசனங்களில் காண்கி றோம்.
இவையெல்லாம் அவர்களால் எப்படிச்
செய்ய முடிந்தது? அவர்கள்
காத்திருந்து பெற்றுக்கொண்ட பரிசுத்த
ஆவியின் பெலன் மூலமாகத்தான்.

இதைப் போன்று ஆண்டவர் நம்மு
டைய வாழ்வில், நாம் காத்திருக்கும்
போது பரிசுத்த ஆவியின் பெலனைக்
கொடுக்க விரும்புகிறார். ஆகவே
தேவ சமூகத்தில் காத்திருப்போம். காத்
திருக்கும் நேரம் ஒருநாளும் வீணா
காது. காத்திருக்குதல் எல்லா விதத்
திலும் நமக்கு நன்மையையே கொண்டு
வரும். ஆண்டவர் சொன்ன ஒவ்
வொரு வார்த்தையும் தாமதித்தாலும்
நிச்சயமாக நிறைவேறும், ஜீவ விருட்
சம் போலிருக்கும். காத்திருந்து கர்த்
தரின் ஆசீர்வாதங்களை, உயர்வை
அனுபவியுங்கள். ஆமென்.


*இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு*
*நீதிமான்களாக்கப்படுகிறார்கள். ரோமர்.3:34*

# கிருபையும் விசுவாசமும்

(சிறப்பு வேதபாடம்)



செய்தியாளர்
**Pr.டேவிஸ்**
நல்லசமாரியன் சபை,
மதுரை

நாள் அக்டோபர் 2014
**14** முதல் **18** வரை
[செவ்வாய் முதல் சனி வரை]
தினமும் மாலை 6.30 மணி

இடம் **அல்லேலூயா டவர்**
நல்ல சமாரியன் ஆலயம்,
47, அழகர் நகர் 5வது தெரு,
கோ.புதூர், மதுரை–7.

தொடர்பு **நல்ல சமாரியன் சபை, 0452-2568060**






வருஷம் உம்முடைய பார்வையில் எப்
படி இருக்கிறது என்றான்? அதற்கு
ஆண்டவர் ஆயிரம் வருஷம் என் பார்
வையில் ஒரு நொடியைப் போல் இருக்
கிறது என்று பதிலளித்தார். அதற்குப்
பின் அந்த மனிதன் பணத்தைக் குறித்
ததான ஒரு கேள்வியைக் கேட்டான்.
மில்லியன் டாலர் பணம் உம்முடைய
பார்வையில் எப்படி இருக்கிறது என்று
கேட்டான்? மில்லியன் டாலர் பணம்
என் பார்வையில் ஒரே ஒரு நாண
யத்தைப்*(Penny)* போலிருக்கிறது என்
றார். அதற்கு அந்த மனிதன் ஆண்ட
வரே அந்த நாணயத்தில் ஒன்றை
எனக்குத் தர முடியுமா....? என்று ஆர்வ
மாய்க் கேட்டான்...அதற்கு ஆண்டவர்
நிச்சயமாகத் தருகிறேன். அதற்காக நீ
ஒரு நொடிப்பொழுது காத்திருக்க
வேண்டும் என்று பதிலளித்தார்.

அநேக வேளைகளில் ஆண்டவ
ருடைய திட்டம் நம் வாழ்க்கையில்
வெளிப்படுத்தப்பட காத்திருத்தல் என்
பது இயலாத ஒன்றாகத் தோன்றுகிறது.
ஆனால், காத்திருக்கப் பழகிக் கொள்
வோமானால், ஆண்டவர் நமக்கென
வைத்திருக்கும் மிக நன்மையா
னதொன்றை நாம் காணமுடியும். நம்
மில் அநேகர் என் வாழ்க்கையில் ஏன்
இது நடக்கவில்லை? எப்பொழுது
நடக்கும்? என்று கேள்விக் கேட்பதை
விட்டுவிட்டு ஆண்டவர் மேல் நம்
பிக்கை வைத்து அவரிடத்திலிருந்து
நன்மையானதொன்று வெளிப்படக்
காத்திருக்கப் பழகிக்கொள்ள வேண்டி
யவர்களாக இருக்கிறோம்.

நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதி
யிலும் கர்த்தருடைய வேளைக்காக
காத்திருக்க வேண்டும். நாம் எதைச்
செய்தாலும் சுயமாய் ஒன்றும் செய்யா
மல், இது கர்த்தருடைய சித்தமா என்
பதை அறிந்து செய்ய வேண்டும்.
**1**பேதுரு **5:6**ன் படி கர்த்தரின் பலத்த
கரங்களுக்குள் அடங்கிக் காத்திருக்க
வேண்டும்; சங்.**27:14**ன் படி தைரியத்து
டன் காத்திருக்க வேண்டும்; சங்.**40:
1,2**ன் படி பொறுமையுடன் காத்திருக்க
வேண்டும்; சங்.**37:34**ன் படி அவருடைய
வழிகளைக் கைக்கொண்டு காத்திரு
க்க வேண்டும். இப்படியாகப் பல வசனங்
களை நாம் வேதத்தில் வாசிக்கின்றோம்.

நாம் காத்திருக்கும் வேளையில், நம்
முடைய சிந்தையில் அறிந்து கொள்ள
வேண்டிய சில உண்மைகளை உங்க
ளுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

### 1. காத்திருத்தலில் தேவ திட்டம்

God has a Purpose for your wait

குறித்த காலத்துக்குத் தரிசனம்
இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடி
விலே அது விளங்கும், அது பொய்
சொல்லாது; அது தாமதித்தாலும்
அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய்
வரும், அது தாமதிப்பதில்லை
**(ஆபகூக் 2:2,3).** *If it seems slow in
coming, wait. It's on its way. It will come
right on time.*

ஆண்டவர் உங்களுக்குக் கொடுத்த
தரிசனம் அல்லது வாக்குத்தத்தம்
நிறைவேறத் தாமதிப்பது போல் தோன்
றினாலும் அதற்காகக் காத்திருங்கள்.
ஆண்டவர் குறித்த நேரத்தில், ஏற்ற
வேளையில் நிச்சயமாக நிறைவேறும்.
ஏன் தாமதிக்கிறது? ஏன் நடக்க
வில்லை? என்று அநேக வேளை
களில் நம்மால் புரிந்து கொள்ள முடி
யாது. ஆனால், ஆண்டவர் அதைக்
குறித்து ஒரு திட்டத்தை வைத்திருக்
கின்றார். நாம் காத்திருப்பதற்கு ஒரு
முகாந்தரம் உண்டு. ஏனென்றால்,
ஆண்டவர் தான் செய்யும் ஒவ்வொரு
காரியத்திற்கும் ஒரு திட்டத்தையும்,
நோக்கத்தையும் வைத்திருக்கின்றார்.
காத்திருக்கும் பொழுது கீழ்காணும்
மூன்று காரியங்களை நாம் நினைவில்
கொள்ள வேண்டும்.

1. நான் காத்திருப்பதால் ஆண்ட
வரின் நாமம் மகிமைப்படும்.
2. நான் காத்திருப்பது என்பது
என்னுடைய நன்மைக்காக.

3. நான் காத்திருப்பதால் எனக்கும் மற்றவர்களுக்கும் நன்மை யுண்டாகும்.

யோசேப்பின் வாழ்க்கையை நாம் எடுத்துக் கொள்வோமானால், அவன் தன் 17 வயதில் ஆண்டவரால் ஒரு சொப்பனத்தைப் பெற்றான். அது உடனே நிறைவேறவில்லை. அவனுக்கு 30 வயதாகும் போது அந்தச் சொப்பனம் நிறைவேறிற்று.

யேசேப்பின் வாழ்க்கையில் ஆண்டவரின் திட்டம் வெளிப்படுத்தப்பட 13 வருஷம் காத்திருக்க வேண்டியதாயிற்று. அதுவரை அவன் தன் வாழ்க்கையில் பல போராட்டங்களைச் சந்தித்தான். அவன் தன் சொந்த சகோதரர்களால் வெறுக்கப்பட்டான். அவர்கள் அவனைக் கொன்று விட மனதாயிருந்தார்கள். அடிமையாக விற்கப்பட்டான். அவன் உண்மையும் உத்தமுமாயிருந்தபோதும் தன் எஜமானால் குற்றம் சாட்டப்பட்டான். தனக்கு உதவி செய்வதாகச் சொன்னவர்கள் அவனை மறந்து போனார்கள். இவைகளின் மத்தியில் அவன் சோர்ந்து போகவில்லை. ஆண்டவர் தன் வாழ்க்கையில் வைத்திருக்கும் திட்டம் நிறைவேறக் காத்திருந்தான். இப்படிப்பட்ட பாதைகளை நாம் கடந்து செல்லும் போது ஆண்டவரின் நாமம் மகிமைப்படும். தாமதித்தாலும் சிறப்பான ஒன்றை ஆண்டவர் நமக்காக வைத்திருப்பார். மற்றவர்களுக்கு அதனால் நன்மையுண்டாகும். இம்மூன்று காரியங்களும் யோசேப்பின் வாழ்க்கையில் நடந்தது.

முதலாவதாக பார்வோனுக்கு உண்டான சொப்பனத்திற்கு ஒருவராலும் விளக்கம் சொல்ல முடியாமற்போன போது யோசேப்பைக் குறித்து அவனுக்கு அறிவிக்கப்பட்டது. பார்வோன் யோசேப்பைப் பார்த்து சொப்பனத்தின் அர்த்தத்தைச் சொல்ல ஒருவரும் இல்லை; நீ ஒரு சொப்பனத்தைக் கேட்டால், அதின் அர்த்தத்தைச் சொல்வாய் என்று உன்னைக் குறித்து நான் கேள்விப்பட்டேன் என்றான். அதற்கு யோசேப்பு தன் சுய மகிமையைத் தேடாமல் ஆண்டவரின் நாமத்தை மகிமைப்படுத்தினான். நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச் செய்வார் என்று (ஆதி.41:16) கர்த்தரின் வல்லமையையும், அவருடைய பராக்கிரமத்தையும் பார்வோனுக்கு தெரியப்படுத்தினான்.

இரண்டாவதாக ஆண்டவர் யோசேப்புக்கு வைத்திருந்த உயர்வையும், ஸ்தானத்தையும் சரியான நேரத்தில், சரியான இடத்தில் பெற்றுக் கொள்ள அவன் இது போன்ற சூழ்நிலைகளை, பாதைகளைக் கடந்து செல்ல வேண்டியதாயிருந்தது.

யோசேப்பின் வாழ்க்கையில் ஏற்பட்ட தாமதம் அவனுக்கு ஒரு பெரிய உயர்வைக் கொண்டு வந்தது. நீ என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய்; சிங்காசனத்தில் மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன் (ஆதி. 41:40–43) என்று யோசேப்பை எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக்கினான்.

மூன்றாவதாக ஆண்டவரே, வரப்போகும் பஞ்சத்தினின்று ஜனங்கள் காக்கப்படும்படி யோசேப்பை எகிப்துக்கு அனுப்பினார். சகல தேசங்களிலும் பஞ்சம் கொடிதாயிருந்தது. அனைவரும் யோசேப்பினிடத்தில் எகிப்துக்கு வந்து தானியம் பெற்றுக் கொண்டு போனார்கள். பல தேசத்து ஜனங்களும், தன் தகப்பன் மற்றும் சகோதரர்களும் தன்னால் போஷிக்கப்பட ஆண்டவர் யோசேப்பின் வாழ்வில் பெரிய திட்டத்தை வைத்திருந்தார். அதற்காக அவன் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. நீங்கள் காத்திருப்பது ஒரு போதும் வீணாகப் போகாது. ஆண்டவர் ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார். Your waiting time is not wasting time. God has a prupose for your wait.





## 2. காத்திருத்தல் நம்மை ஆயத்தப்படுத்தும்

(Waiting time is a Developing time)

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு. வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு சமயமுண்டு (பிரசங்கி 3:1). நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு. *There is a time to sow and there is a time to reap.* விதைப்பதற்கும், அறுவடை செய்வதற்கும் இடையே பல காரியங்கள் இருக்கிறது. விதையானது மண்ணுக்குள் இருக்கும் போது சில மாற்றங்கள் அடைந்து வளர ஆரம்பிக்கிறது. செடியாகி பின் அறுவடைக்கு தயாராகிறது. அது போல் நம் வாழ்க்கையில் காத்திருக்கிற அந்த இடைவெளி நம்மைப் பக்குவப்படுத்தும். பொறுமையை மற்றும் ஆவிக்குரிய கனிகள் வெளிப்படக் காரணமாக அமையும். நம் வாழ்க்கையில் இது ஒரு முக்கியமான நேரம். இந்த நேரத்தில் ஒவ்வொருவரும் கடந்து செல்லும் பாதை, சூழ்நிலை, நேரம் ஆகியவை நபருக்கு நபர் வேறுபடும். எனவே மற்றவர்களின் அனுபவத்தோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது.

நீங்கள் காத்திருக்கும் போது அதாவது காரியம் கை கூடி வராமல் தாமதிக்கும் போது (விதைக்கும் சமயத்தில் *Planting Season*) மற்றவர்கள் அறுவடை செய்வதைப் பார்த்து ஒரு போதும் பொறாமைப் படக்கூடாது. நீங்கள் இருக்கும் இந்த சூழ்நிலையைக் கடந்துதான் அந்தப் பலனை அவர்கள் அடைந்திருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும். மற்றவர்களுடைய தரிசனங்கள், கனவுகள் நிறை வேறுவதை நீங்கள் பார்க்கும்போது நம்முடைய தரிசனங்கள் நிறைவேறுதலுக்கான நேரம் வந்து கொண்டிருக்கிறது என்று சொல்லுங்கள். ஒருவர் இப்படியாகச் சொன்னார், “Comparision is a thief of Joy” என்று. நாம் காத்திருக்கும் நேரத்தை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது என்பது, நம் சந்தோஷத்தை இழக்கச் செய்யும் ஒரு காரியமாக இருக்கிறது. அவர்களுக்கு காரியத்தை நிறைவேறச் செய்த ஆண்டவர் உங்களுக்கும் அதே போல ஜெயத்தைக் கொடுப்பார்.

யோசேப்பு கர்த்தர் தனக்கு நியமித்த வேளை வரும் மட்டும், கர்த்தருக்குப் பிரியமாய் நடந்து கொண்டான். ஒரு போதும் மற்றவர்கள் சமாதானத்தைக் கெடுக்கவோ, தன் சமாதானத்தை இழக்கவோ இல்லை. தன் பக்கம் நியாயம், உண்மை இருந்தும் தன்னை பரியாசம் செய்தவர்களை அவன் பழி வாங்கவில்லை. எல்லாவற்றையும் சகித்துப் பொறுமையோடு காத்திருந்தான்.

காத்திருக்கும் நேரம் நம்மைப் பழக்குவிக்கிற பக்குவப்படுத்துகிற, உருமாற்றுகிற, குணாதிசயங்களை மாற்றுகிற நேரம். ஆண்டவர், நீங்கள் காத்திருக்கும் அந்த நேரத்தில் தாம் வனையவிரும்பும் பாத்திரமாக உங்களை வனைய விரும்புகிறார். அவர் நம்மை தன்னைப் போல மாற்ற விரும்புகிறார். தம்முடைய சாயல், தம்முடைய சிந்தை, தம்முடைய சுபாவம் உடையவர்க ளாக வனைய விரும்புகிறார்.

## 3. காத்திருத்தல் நம்மை பெலப்படுத்தும்

Waiting time is strengthening time.

ஏசா.40:31, கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுபெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்...

இந்த வசனத்தின்படி நாம் கர்த்தருக்குக் காத்திருக்கும்போது புது பெலனைப் பெற்றுக் கொள்வோம் என்பது நிச்சம். அப்.1:5ல், இயேசு தன் சீஷர்களைப் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருக்கும்படிச் சொன்னார். சீஷர்களும் அவருக்குக் கீழ்ப்படிந்து 10 நாட்கள் காத்திருந்து அப்.1:8ல்

# டிக்கி-டக்கா

*Pr. Simiyon*

Tika-taka

***Hello Friends, How are you...*** எல்லோரும் இப்பொழுது ***World cup Football enjoy*** பண்ணியிருப்பீங்க. நாம் எல்லோரும் அறிந்திருக்கிறபடி, ஜூலை 13ம் தேதி நடந்த இறுதிப் போட்டியில் ஜெர்மனி 1 கோல் போட்டு உலகக்கோப்பையைத் தட்டிச் சென்றது. அர்ஜென்டினாவிற்கு கடினமாக விளையாடியும் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. ஆனால் ஜூலை 8ஆம் தேதி நமது இந்திய நேரத்திற்கு நள்ளிரவில் நடந்த ஜெர்மனி – பிரேசில் அரையிறுதி ஆட்டம் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. இந்த 20வது உலகக்கோப்பை ***FIFA*** பிரேசிலில் நடந்து கொண்டிருக்கிறது. அயல் தேசமான ஜெர்மனி, பிரேசில் நாட்டில் வந்து விளையாடி, அந்நாட்டினரை தீவிர மாய்த் தோற்கடித்தனர். அங்கேயிருந்த சூழ்நிலைகள், விளையாட்டு அரங்கத்தில் கூடியிருந்த ஆதரவாளர்கள் பிரேசிலுக்குக் கிடைத்த மொத்த ஷாட்டுகள், கார்னர் கிக் இவையெல்லாம் சாதகமாயிருந்தபோதும், அவர்கள் படுதோல்வியுற்றனர். இதற்கான காரணம் என்ன ?

ஜெர்மானிய வீரர்கள், இந்த அரையிறுதி ஆட்டத்தில், டிக்கி–டக்கா என்ற விளையாட்டு முறையைக் கையாண்டனர். டிக்கி–டக்கா என்றால், கிடைக்கக் கூடிய சிறிய இடைவெளிகளில் பந்தைக் கடத்திக் கொண்டு *Goal Post*ற்குள் கோல் அடிப்பது. பிரேசில் கால்ப்பந்தாட்ட வீரர்கள், பந்து யாரிடம் செல்கிறது என யோசிக்குமுன், ஜெர்மானிய வீரர்கள் பந்தை *Goal Post*ற்குள் அடித்துவிட்டனர். இவ்வாறாக அந்த அரையிறுதி ஆட்டத்தில் ஜெர்மனி 7 கோல்களை அடித்து, அபார வெற்றி பெற்றது. அதே சமயம் பிரேசில் வீரர்கள் மிகவும் கஷ்டப்பட்டு ஒரே ஒரு கோல் மட்டுமே அடித்தனர். கால்பந்தாட்ட சாம்பியனான பிரேசிலுக்கு என் இந்தப் படுதோல்வி ? ஜெர்மனி பந்துகளைக் கடத்திச் செல்ல ஆங்காங்கே, அவ்வப்போது தங்களையாறியாமலே இடைவெளியை விட்டுக் கொடுத்தனர். இதை வாசித்துக்கொண்டிருக்கும் அருமையான வாலிபர்களே, இதே போலத்தான் நாமும் நம்முடைய வாழ்க்கையில் சாத்தானுக்கு சிறிய இடைவெளிகளைக் கொடுத்துவிடுகிறோம். பின்னர் கேட்கவா வேண்டும் ... பிசாசானவன் வாழ்க்கையில் இஷ்டம் போல விளையாண்டு ஒவ்வொரு முறையும் ஜெயம் எடுக்கிறான். ஆதலால், நம்முடைய வாழ்க்கையில் காணப்படும் கொஞ்ச இடைவெளி, கொஞ்சம் புளித்தமா, நம்முடைய வாழ்க்கை என்னும் திராட்சத்தோட்டத்தில் சிறு நரிகளுக்கு இடம் கொடுத்தல், இவைகளில் இருந்து விடுதலையாக வேண்டும். இல்லையேல் படுதோல்வி ஏற்படும்.

### 1. கொஞ்சம் இடைவெளி
(Small Gap)

எபே.4:27– பிசாசுக்கு இடம் கொடாதிருங்கள். வாலிப நாட்களிலே பிசாசுக்கு வாலிபர்கள் எவ்வாறு இடம் கொடுக்கிறார்கள் ? பொய், மற்றவர்களை ஏமாற்றுவது, வயது முதிர்ந்தவர்களைக் கனவீனப்படுத்துவது என பிசாசுக்கு இடம் கொடுத்து விடுகிறார்கள். இதை வாசிக்கின்ற நீங்கள் கேட்கலாம், இது எல்லாம் என்ன அவ்வளவு பெரிய விஷயமா ? ஆம், இவை யாவும் பிசாசின் காரியங்கள். பிசாசானவனுக்கு இருக்கக்கூடிய இன்னொரு





பகுதி–26

# எபிரெயர்

*Pr. S.Rajan*

எபிரெயர் 11ம் அதிகாரத்தில் விசுவாசித்தோரின் பட்டியலில் நோவா, ஆபிரகாம் ஆகியோரின் விசுவாசத்தைக் குறித்துக் கற்றுக் கொண்டோம். தொடர்ந்து சாராளின் விசுவாசத்தைக் குறித்துக் கற்றுக் கொள்வோம். “விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயது சென்றவளாயிருந்தும் பிள்ளையைப் பெற்றாள். ஆனபடியால், சீரஞ்செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே, வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப்போலவும் மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள்.” (எபி. 11:11,12). சாத்தியமற்ற காரியத்தை விசுவாசித்ததற்கு, சாராள் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும் ஆதி. 18:9 முதல் 15 வரை வசனங்களில் முதலாவது சாராள் கர்த்தரை நம்புவது கடினமான காரியமாகக் காணப்பட்டது. ஆபிரகாமின் கூடாரத்தின் வெளியே தேவன் நின்று உன் மனைவியாகிய சாராள் எங்கே என்று கேட்டு, ஒரு உற்பவகாலத் திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்தில் திரும்ப வருவேன் அப்பொழுது உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார். சாராள் அவருக்குப் பின்புறமாய் கூடார வாசலில் கேட்டுக் கொண்டிருந்தாள் என்றும் அவள் தன் உள்ளத்தில் நகைத்து ஆபிரகாமைப் பார்த்து நானோ கிழவியாயிருக்கப் பிள்ளை பெறுவதுமெய்யோ என்று சொல்வானேன் என வினவினாள். தேவன் கூறிய வாக்குத்தத்தம் நம்பத்தக்கதாக இல்லை ஆனால் பின்பு வாக்குப் பண்ணியவர் யார் என்பதையும், அவர் எப்படிப்பட்டவர் என்பதையும் உணர்ந்திடவே தன் சிந்தையை மாற்றிக் கொண்டாள். தேவன் மனிதனின் இயலாமையைக் குறித்து யோசிக்கிறவரல்ல, இயற் கைக்கு அப்பாற்பட்டு அவர் கிரியை செய்கிறவர். ஆகவே சாராள் அவிசுவாசத்தை விட்டு விட்டு கர்த்தரை விசுவாசிக்க ஆரம்பித்தாள். தேவன் கூறிய வாக்குத்தத்தத்தை நம்பினாள். ஆகவே வயதான நேரத்திலும் ஈசாக்கைப் பெற்றெடுத்தாள், இது ஓர் அற்புதமான செயலாகும்.

இதை வாசிக்கிற நாம் கர்த்தர் பொய் சொல்லுகிறவரல்ல என்றும், வாக்குப்பண்ணுவாரானால் அதை இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையிலும் நிறைவேற்றுவார் என்பதை அறிந்து, சூழ்நிலையைக் காணாதபடி கர்த்தரை நம்ப வேண்டும். மேலும் எபி. 11:12ல் சாராளின் விசுவாசம் எந்தவிதத்தில் பலனைடைந்தது என்பதைக் காண்கிறோம். வாக்குத்தத்தத்தின் குமாரனைப் பெற்றெடுத்தாள். இச் சந்ததியின் மூலமாக ஜாதிகள் உருவானார்கள், முதலாவது அந்தச் சந்ததியின் மூலமாக இஸ்ரவேல் தேசம் உருவானது. பின்பு அந்தச் சந்ததியில் இயேசு பிறந்தார். அவர் மூலமாக விசுவாசிகள் என்னும் பெரும் சந்ததி உண்டாகியிருக்கிறது.

அன்பானவர்களே சாராள் சாத்தியமற்றதை விசுவாசித்தாள் அப்படியே சாத்தியமற்றதைப் பெற்றுக் கொண்டாள். நாம் இன்று இஸ்ரவேல் தேசத்தைக் காணும்போது சாத்தியமற்றதை விசுவாசித்த சாராளின் விசுவாசத்தையே அது சுட்டிக் காட்டுகிறது. அப்படியே இன்றைய நாட்களில் உலகமுழுவதும் விசுவாசிகளின் திரள்கூட்டத்தைக் காணும்போது அவர்கள் கிறிஸ்துவினால் மீட்கப்பட்டவர்கள் என்பதை அறிகிறோம். இதுவும் சாராள் வாக்குத்தத்தத்தை விசுவாசித்ததின் பிரதிபலனே எனக் காண்கிறோம். நமது

வாழ்க்கையிலும் சாத்தியமற்ற காரியங்களாயினும் கர்த்தர் கூறுவாரானால் அதை அப்படியே விசுவாசிப்போம், ஆசீர்வாதமாக மாறுவோம்.

### பரதேசிகளின் விசுவாசம் 11:13–16

விசுவாசிகள் இந்த உலகில் அந்நியரும், பரதேசிகளுமாக இருக்கின்றனர். அவர்கள் பரலோகவாசிகளாக இருந்தாலும் இந்த உலகத்தில் தற்காலிகமாக வாழ்கின்றனர். இங்கே பரதேசி எனக் குறிப்பிடும்போது ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரைக் குறிக்கிறது. இவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல் மரித்துப்போனார்கள். ஆனால் தூரத்திலே கண்டு அதை நம்பி அதை அணைத்துக் கொண்டார்கள். இவர்களுடைய விசுவாசத்தைக் காணும்போது முதலாவது அது தரிசிக்கிற விசுவாசமாகக் காணப்பட்டது. அதாவது அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைத் தூரத்திலே கண்டார்கள். கண் பார்வையில் அல்ல இருதயத்திலும், சிந்தையின் மூலமாகவுமே கண்டார்கள். அது என்ன வென்றால் வாக்குத்தத்தின் நிறை வேறுதலையும் மேன்மையான பரமதேசத்தையுமே.

இரண்டாவது அவர்கள் விசுவாசம் வளர்ச்சியடைகிற விசுவாசமாகக் காணப்பட்டது. மகிமையான தேசத்தை சுதந்தரிக்கப் போகிறவர்கள். ஆகவே இங்கு அந்நியரும், பரதேசிகளும் என அறிக்கையிட்டார்கள். மூன்றாவதாக அவர்களுடைய விசுவாசம் கிரியையுள்ளதாயிருந்தது. ஏனெனில் வாக்குத்தத்த தேசத்தைக் குறித்துப் பெருமையாக பேசிக்கொண்டு மாத்திரம் இருக்கவில்லை, சுயதேசத்தை நாடிப் போகிறோம் என அறிக்கையிட்டு முன்னேறிச் சென்றார்கள். முடிவாக அது முடிவுபரியந்தம் நிலைநிற்கிற விசுவாசமாக இருந்தது. தாங்கள் விட்டு வந்த தேசத்திற்கு திரும்பி போகவில்லை. உலகத்தில் இருந்து தங்களை வேறு பிரித்துக் கொண்டு வாக்குத்தத்த தேசத்தை நோக்கி சென்றார்கள். சமயம் கிடைத்தும் அவர்கள் பின்வாங்கவில்லை. அவர்களது எண்ணம், விருப்பம், எல்லாம் அந்த வாக்குத்தத்த தேசமே. ஆகவே கடைசிவரை அதற்காகவே வாழ்ந்து விசுவாசத்தோடே மரித்தார்கள். இதை வாசிக்கும் நாமும் இந்த உலகில் அந்நியரும் பரதேசிகளாகவே இருக்கிறோம் என்பதை அறிந்திடுவோம். அன்று அவர்களுக்கு இருந்தது போல தரிசிக்கிற விசுவாசம், வளர்ச்சியடைகிற விசுவாசம், கிரியை செய்கிற விசுவாசம் எல்லாவற்றிற்கும் மேலாக முடிவு பரியந்தம் நிலைநிற்கிற விசுவாசத்தை உடையவர்களாய்க் காணப்படுவோம்.

இவ்விதம் அவர்கள் வாழ்ந்ததற்கு அவர்களுக்கு கிடைத்த பிரதிபலனைக் குறித்து 16ம் வசனத்தில் காண்கிறோம். முதலாவதாக தேவன் அவர்களுடைய தேவன் என்னப்பட வெட்கப்படுகிறதில்லை. அவர்களுடைய வாழ்க்கை பேசுகிறதாயிருக்கிறது. இரண்டாவதாக தேவன் அவர்களுக்கென்று ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணியுள்ளார். அது என்றென்றும் நிலைத்திருக்கும் பரலோக ராஜ்யமாகும். நாமும் தேவனை விசுவாசிப்போம். அதற்கேற்ற பிரதிபலனை நிச்சயம் பெற்றுக் கொள்வோம்.

### ஆபிரகாமின் தியாகமான விசுவாசம்

ஆபிரகாமின் விசுவாசத்தைக் குறித்து ஏற்கனவே நாம் முன்பு கற்றிருந்தாலும் இங்கே திரும்பவும் ஆபிரகாமின் தியாகமான விசுவாசத்தைக் குறித்து கூறப்பட்டுள்ளது. இதனை எபிரெயர் 11:17–19 வசனங்களில் காண இயலும். அது என்னவெனில் தேவன் கூறிய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவதற்கு அவன் விசுவாசத்தோடே, மாபெரும் கிரயம் செலுத்தவேண்டியதாய் இருந்தது. அதன் பிரதிபலனாக விடுதலையையும் பெற்றுக்கொண்டான்.

### தேவனின் கட்டளை

ஈசாக்கை பலிசெலுத்தும்படியாக கூறியது கர்த்தர்தானா என நம்ப முடியாத அளவிற்குள்ள கட்டளையாகும். இது வழக்கத்திற்கு மாறாக உள்ள செயலாகும். ஆதியாகமம் 21ம் அதிகாரத்தில் இஸ்மவேலை அனுப்பிவிடும்படியாகச் செய்து விட்டு ஈசாக்கினாலே உன் சந்ததி விளங்கும் எனக் கூறிவிட்டு 22ம் அதிகாரத்தில் அவனைப் பலி செலுத்தும்படிக் கூறுவாரானால் அது எவ்வளவு விநோதமான காரியம்! ஆனால் ஏன் இவ்விதம் என்பதை சற்று நிதானித்துப் பார்ப்போமானால் ஆபிரகாமிற்கு வந்த அழைப்பு சாதாரணமானது அல்ல. ஒரு மேன்மையான அழைப்பாகும். மேலும் தேவ குமாரனாகிய கிறிஸ்து அவர் சந்ததியில் வரவேண்டும். மேன்மையான வாக்குத்த தேசத்தை வாக்குப் பண்ணியிருந்தார். மேலும் வானத்தின் நட்சத்திரங்களைப்போல சந்ததியை பெருகப்பண்ணுவேன் எனக் கூறியிருந்தார். மற்றும் ராஜாக்கள் உன் சந்ததியில் தோன்றுவார்கள் என்றார். உலகமனைத்திற்கும் ஆசீர்வாதமாய் இருப்பாய் என்றார். இப்படிப்பட்ட மேன்மையான ஆசீர்வாதங்களைப் பெறப்போகிற ஆபிரகாம் மேன்மையானவிதத்திலே வித்தியாசமான முறையிலே சோதிக்கப்பட வேண்டியதாயிருந்தது. ஆபிரகாமிற்கு எண்ணமெல்லாம் ஈசாக்குதான். அப்படியிருக்கும்போது அவனைப் பலிசெலுத்துவது என்பது எளிதான காரியம் அன்று. எனினும் ஆபிரகாம் பெரும் விலைகிரயத்தோடு ஈசாக்கை பலி செலுத்த முன்வந்தான். ஆபிரகாம் ஈசாக்கையல்ல தேவனையே முதன்மைப்படுத்தியிருந்தான். அன்பானவர்களே, தேவன் கூறும் சின்ன சின்னக் காரியங்களுக்கு நம்மை அர்ப்பணிக்க முடியவில்லை. அதன் காரணம் நம் வாழ்க்கையில் தேவனை முதன்மைப்படுத்தாமல் இருத்தலே. இன்றே அவரை முதன்மைப்படுத்தி அவர் கூறும் காரியங்களுக்கு அர்ப்பணிப்போம். ஆசீர்வாதம் பெறுவோம். பெரிய அளவில் ஆவிக்குரிய அனுபவங்களையும், ஆசீர்வாதங்களையும் பெற வேண்டுமானால் பெரிய அளவிலே தேவன் சோதிக்கிறார். அதற்கு நாமும் பெரிய அளவிலே கிரையம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

ஆபிரகாமின் தியாகமான விசுவாசமானது, தேவன் முட்டாள்தனமான கட்டளை கொடுக்கமாட்டார் என்பதை அறிந்திருந்து, ஈசாக்கைக் குறித்து தேவன் கூறிய வாக்குத்தத்தத்தை ஒருபோதும் தேவன் நிறைவேற்றாமல் போகமாட்டார் என்றும், ஈசாக்கின்றி தேவன் வாக்கை நிறைவேற்ற முடியாது என்பதையும் அறிந்திருந்தான். ஆகவே ஈசாக்கை பலி செலுத்துகிற விஷயத்தில் தேவன் எந்த நேரத்திலும் தடுத்து நிறுத்தலாம் என விசுவாசித்திருக்கக்கூடும். நமது வாழ்கையிலும் வெறுமனே கர்த்தர் கட்டளையைக் கொடுப்பதில்லை. எவ்விதத்திலும், வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார். ஆகவே அவர் கூறும் காரியத்திற்கு விசுவாசத்தோடே கீழ்ப்படிவோம். ஆபிரகாம் மரித்தோரிலிருந்து ஈசாக்கைப் பாவனையாக திரும்பவும் பெற்றுக் கொண்டதுபோல நமது வாழ்க்கையில் இழப்பு அல்ல, ஆசீர்வாதத்தையே பெற்றுக் கொள்வோம்.

தருக்கு நம்மை அர்ப்பணிப்போம். இந்தப் பத்து ஊழியர்களையும் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. Hypocrite Workers – மாய்மாலமான வேலைக்காரர்கள் (Luke19:14)
2. Hard Workers - கடினமாய் உழைப்பவர்கள் *(Luke19:16-19)*
3. Hopeless Workers - பிரயோஜனமற்ற ஊழியர்கள் (Luke 19:20,21)

**1. மாய்மாலமான வேலைக்காரர்கள்**
**Hypocrite Worker: (லூக்கா 19:14)**

இந்த முதல் வகையான வேலைக்காரர்கள் வேலை செய்வது போல் நடிக்கின்றார்கள். ஆனால், உண்மையிலேயே அவர்கள் வேலை செய்யவில்லை. மற்றவர்கள் முன்பாக எஜமானைப் பிரியப்படுத்த முயற்சிக்கின்றார்கள். ஆனால் மறைமுகமாக எஜமானனாகிய இயேசுவை மறுபடியும் சிலுவையில் அறைகின்றனர். இன்னொரு விதத்தில் சொல்லப் போனால் எஜமானன் அவர்களுக்கு திரவியங்களைக் கொடுத்து வியாபாரம் பண்ணச் சொல்லும்போது அவர்கள் திரவியங்களை வாங்கிக் கொண்டார்கள். எஜமானனுக்கு முன்பதாக ஒன்றும் பேசவில்லை. ஆனால் அவர் போய் விட்டப் பின்போ, எஜமானைப் பகைத்து, இவர் எங்கள் மேல் ராஜாவாக இருப்பதற்கு எங்களுக்கு மனதில்லை என்று சொல்லுகிறார்கள். இவர்கள்தான், மறைமுகமான பாவங்களில் ஜீவிக்கின்றவர்கள். தங்களைப் பின்பற்றுகிறவர்களைப் பார்த்து நாங்கள் சொல்லுவதைச் செய்யுங்கள். நாங்கள் செய்வதைச் செய்யாதிருங்கள் என்கின்றனர். இவர்கள் எஜமானையும் அவர்களுடைய வேலையையும் குறித்துக் குறை சொல்லுகிறவர்கள். இந்த மாய்மாலமான வேலைக்காரரின் அடுத்தக் குணாதிசயம் தேவனுடைய ஊழியத்திற்கு விரோதமாகச் செயல்படுகிறவர்கள். இந்த முதல் வகையான ஊழியர்களுக்குக் கிடைக்கக் கூடியப் பலனையும் நான் உங்களுக்கு சொல்லுகிறேன்.

மாய்மாலமான வேலைக்காரர்களின் பலன்கள்: அவர்களுக்கு எஜமானிடம் எந்த ஒரு பங்கும் பலனும் கிடையாது. லூக்கா 19:14,15,27ஐ வாசித்துப் பார்த்தால் இவர்கள் கர்த்தருடைய வேலையில் இருந்து பிடுங்கப்படுகிறார்கள். அதன் பின் மரிக்கின்றார்கள். அவர்களுடைய வெறுப்பும் மற்ற செயல்களும் தொடர்ந்து நடக்கக்கூடிய தேவனுடைய வேலையை நிறுத்தவே முடியாது. இந்த வகையான ஊழியர்களின் குணாதிசயங்கள் என்னுடைய உங்களுடைய வாழ்வில் இராதபடிக்கு எச்சரிக்கையாய் இருப்போம். நம்முடையத் தனிப்பட்ட ஆவிக்குரிய, அந்தரங்க வாழ்வில் தேவனுக்கு முன்பாக எப்படி இருக்கின்றோம்? நம்முடைய ஊழியத்தில், குடும்ப வாழ்வில், சபையில், சமுதாயத்தில் எவ்வாறு இருக்கின்றோம் என்பதை ஆராய்ந்து, தேவனுடைய சமுகத்தில் நம்மைத் தாழ்த்தி, தேவ கரத்தில் அர்ப்பணித்து, மாய்மாலத்தை நீக்கி, தேவனைப் பிரியப்படுத்துவோமாக.

**2. கடினமாய் உழைப்பவர்கள்**
**Hard Workers:(லூக்கா19:16–19)**

இவர்கள் கர்த்தருடைய வேலைக்கு என்று தங்களை முற்றிலும் அர்ப்பணித்தவர்கள். வேதம் கூறுகிறபடி கர்த்தருடைய வேலையை நாம் அசதியாய்ச் செய்யக்கூடாது. ஆனால் அர்ப்பணித்து செய்ய வேண்டும். கடினமாய் உழைப்பவர்களின் அடுத்த குணாதிசயம் ஆவியின் கனி இவர்களிடம் இருந்து வெளிப்படும். தேவனுடைய திராட்சத்தோட்டத்தில் ஊழியம் செய்யும் பொழுது அவர்கள் மூலமாய் அன்பு, பொறுமை, இச்சையடக்கம், மற்றும் இதர தெய்வீக சுபாவங்களும் வெளிப்படும். இவர்கள் கடினமாய் உழைக்கிறவர்கள். அதே நேரத்தில் வேலைப்பளு அதிகமாகும்பொழுது பொறுமையை இழந்துப் பேசமாட்டார்கள். எவ்வளவு வேலை இருந்தாலும் ஸ்தோத்திரம் பண்ணிக் கொண்டே வேலை செய்வார்கள். ஆதலால் தான் இவர்கள் மூலமாய்ச்





பெயர் “பொய்யன்”. சில சமயங்களில் வாலிபர்கள் தங்களுடைய சுய விருப்பங்களை நிறைவேற்ற, பெற்றோரிடம் பொய் சொல்லிக்கொண்டு, அவர்களுக்குப் பிரியமானவர்களோடு நேரம் செலவிட வீட்டை விட்டு வெளியே செல்கிறார்கள். இதில் பொய்யும் இருக்கிறது, பெற்றோரை ஏமாற்றுவதும் இருக்கிறது. இந்த மாதிரியான சிறிய இடைவெளிகளை சாத்தானுக்குக் கொடுக்கும்போது, அவன் சட்டப்பூர்வமாய் நன்றாய் இடம் பிடிக்கிறான். வாழ்க்கையில் பின்னர் வருந்துகின்றனர். ஏன் நான் செய்வது எதுவும் வாய்க்கவில்லை? ஏன் நான் இன்னும் வாழ்க்கையில் ***Settle*** ஆக முடியவில்லை? என்றெல்லாம் வருந்துகின்றனர். அடுத்ததாக, நமக்குத் திருமணமாகும் வரை நம்முடைய தாய், தகப்பன் நமக்கு தேவனுக்கடுத்தாற்போல் எல்லாமுமாய் இருக்கிறார்கள். ஆதலால், திருமணம் வரையிலும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். திருமணத்திற்குப் பின் அவர்களை கனப்படுத்த வேண்டும். இப்போது காணக்கூடிய அவல நிலை என்னவென்றால், 13,14,15 வயது வந்தவுடனே, வாலிபர்களுக்கு மனதளவில் மாற்றங்கள் ***(Psychological Changes)*** ஏற்படுகிறது. ஆதலால் சிலர் தாறுமாறாய் நடந்துகொள்கிறார்கள். இவ்வாறாக, சாத்தானுக்குக் கொடுக்கக்கூடிய சிறிய இடைவெளி வாழ்க்கையைச் சின்னாபின்னமாக்கி விடுகிறது.

பல ஆண்டுகளுக்கு முன்பதாக, நெதர்லாந்து / ஹாலந்தைக் குறித்து ஒரு உண்மைச் சம்பவத்தை வாசித்தேன். இந்த தேசமானது சற்று தாழ்வாகவும், கடல் மட்டமானது சற்று உயர்வானதாகவும் காணப்படும். ஆதலால் இத்தேசத்தைச் சுற்றிலும் கடல் நீர் உட்புகாதவாறு பெரிய பெரிய கற்களைக் கொண்டு கோட்டைச் சுவர்போல் எழுப்பியிருக்கின்றனர். ஒருநாள் மதிய வேளையில், பள்ளி முடிந்து சிறுவன் ஒருவன் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். அவன் போகும் வழியிலே தண்ணீர் கசிந்து வரக்கூடிய சத்தம் காதுகளில் கேட்டது. உடனே அவன் அத் திசையை நோக்கிச் சென்ற போது, அந்த மதில் சுவரில் ஒரு சிறிய இடைவெளி வழியாக தண்ணீர் வருவதைப் பார்த்து அதை அடைக்க முயற்சி செய்தான். பள்ளியிலிருந்து சுமந்து வந்த பையை அருகில் வைத்துவிட்டு தன் விரலால் அந்தக் அந்த நீர் கசிவை அடைத்தான். காரணம் இந்த சிறிய இடைவெளி கொஞ்சம் கொஞ்சமாக பெரிதாகி தன்னுடைய நாட்டையே அழித்துவிடும் என நினைத்தான். அவன் சிறுவனல்லவா, அப்பக்கமாக யாராவது வந்து உதவுவார்கள் என நினைத்தான். ஆனால் யாரும் அப்பக்கமாக வரவில்லை. நேரம் கடந்து கொண்டே போனது. இப்போது இரவாகிவிட்டது. கடும் குளிர் நிமித்தமாக அவனது விரல் மரத்துப் போய்விட்டது. இரவு நேரத்தில் பசி, களைப்பு, கொடிய பனி இவைகளின் நிமித்தம் அப்படியே சோர்ந்து அங்கேயே மரித்துப் போய்விட்டான். ஆனால் அன்று அவன் செய்த தியாகம் முழு தேசத்தையே பாதுகாத்தது. ஆதலால் இன்றும் அத்தேசத்திற்குள் அவனுடைய சிலையானது நினைவாக வைக்கப்பட்டுள்ளது.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் அருமைத் தம்பி, அருமைத் தங்கச்சி, உன்னுடைய வாழ்க்கையில் காணப்படும் சிறிய இடைவெளியைத் துரிதமாய் அடைத்துவிடு. நீ சரித்திரம் படைக்கலாம்.

**2. கொஞ்சம் புளித்த மா**
(Little Yeast)

**1 கொரி.5:6,** ... கொஞ்சம் புளித்தமா பிசைந்தமா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? இந்தக் கொஞ்சம் புளித்த மா என்பது பாவத்

திற்கும், துர்குணத்திற்கும், பொல்லாப்புக்கும் ஒப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறது (வச.8). புளித்த மா என்பது பழைய மாவைக் குறிக்கிறது. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் நமக்குள் இருந்து பழைய துர்குணங்கள், அடிமைத்தனங்கள், பழைய தீய பழக்க வழக்கங்கள் இவை யாவுமே நெருங்கியிருக்கக்கூடிய பாவங்கள்தான். ஆதலால், நம்முடைய வாழ்க்கைப் பயணத்தில் மற்றவர்களோடு பழகும்போது, தனிமையில் நாம் இருக்கும்போது கவனமாய் இருக்க வேண்டும். ஏனென்றால், நாம் பாவத்திற்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படி அவர் தாமே சிலுவையில் நமக்காக பாவமானார். இதை விசுவாசித்துத்தான் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். இரட்சிக்கப்பட்ட பின் நம்முடைய வாழ்க்கையானது புதிதாய்ப் பிசைந்து உருவாக்கப்பட்ட நல்ல மாவிற்கு ஒப்பிடப்பட்டுச் சொல்லப்பட்டுள்ளது. இதைத்தான் பவுல் 2 கொரி.5:17ல், ... ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின. எல்லாம் புதிதாயின. நமக்குள் இந்த உணர்வு இருந்துகொண்டே இருக்க வேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றோம், பழைய புளித்தமா ஒழிந்து போய்விட்டது, நாம் புதுசிருஷ்டியாயிருக்கிறோம் என்ற நினைவு இருக்க வேண்டும். சோதனைகளோ, பாவங்களோ நெருங்கும்போது பழைய மாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். 2 கொரி. 5:17ஐ அடிக்கொருமுறை அறிக்கையிடுங்கள்.

### 3. சிறுநரிகள் (Little Foxes)

உன்.2:15, திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள்... இங்கே சொல்லப்பட்டுள்ள திராட்சத்தோட்டத்தை நம்முடைய வாழ்க்கைக்கு ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஆதி.49:22, யோசேப்பு கனிதரும் செடி. சிறுநரிகள் மிகவும் தந்திர குணம் உடையவை. இதை சாத்தானுக்கு ஒப்பிட்டுப் பார்க்கலாம். கனி தரக்கூடிய செடியை திராட்சத்தோட்டத்தைக் கெடுப்பதுதான் சிறுநரியின் நோக்கம். உன்னுடைய வாலிபப் பருவமும், கனி தரக்கூடிய, பலனளிக்கக்கூடிய நல்ல பருவம். இந்தப் பருவத்தைக் கெடுத்துப்போடுவதுதான் சாத்தானின் நோக்கம். பாருங்கள், யோசேப்பு தனிமையாயிருக்கும்போது, சிறுநரியானது தந்திரமாய்ப் போத்திபாரின் மனைவியின் மூலமாக வந்தது. ஆனால் யோசேப்பு கர்த்தருக்குப் பயந்ததினிமித்தம், தன்னுடைய கனிதரக்கூடிய பருவத்தை இழந்து போகாமலிருக்க அந்த இடத்தைவிட்டு ஓடிப்போனான். ஒர சிறுநரிதான். ஆனால் யோசேப்பு அதற்கு இடம் கொடுக்கவில்லை. பின்நாட்களிலே யோசேப்பு எகிப்து தேசத்திற்கும், அண்டை தேசங்களுக்கும் கனிதரும் செடியாய் மாறினான். இந்த தெய்வீகத் திட்டத்தைக் கெடுக்க சிறுநரியாகிய சாத்தான் போத்திபாரின் மனைவியின் மூலமாக தனிமையிலிருக்கும்போது முயற்சி செய்தான். யோசேப்பு சாத்தானின் தந்திரங்களுக்கு இடம் கொடுக்கவில்லை.

இன்றும் அந்தச் சிறுநரியானது தந்திரமாய் அநேக வாலிபர்களை கெடுத்துக்கொண்டிருக்கிறான். அவனுடைய தந்திரத்தை அறிந்தவர்கள் தப்பித்துவிடுகின்றனர். மற்றவர்கள் அவனுடைய தந்திரங்களுக்கு ஆளாகி தங்கள் வாழ்க்கையாகிய திராட்சத்தோட்டத்தைக் கெடுத்துக்கொள்கிறார்கள்.

ஆகவே நம்முடைய எதிராளியாகிய சாத்தான் சிறிய இடைவெளிகளில் பந்தைக் கடத்திச் செல்ல இடம் கொடாதிருங்கள்.

**கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.**





# மூன்று விதமான ஊழியக்காரர்கள்

*Rev.Dr.Godswill Israel, Nigeria*

கிறிஸ்துவிற்குள் அன்பான வர்களே, ஆண்டவரும் இரட்சகருமாய் இருக்கக் கூடிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

இம்மாத ஊழியர் பகுதியில், லூக்கா 19:11–27 வரை உள்ள வசனங்களைத் தியானிக்கப் போகிறோம். ஆவிக்குரிய உலகத்தில் இன்று பல தலைவர்கள் இருக்கின்றார்கள். இன்னும் சிலர் எழும்பிக் கொண்டு இருக்கின்றார்கள். நம்முடைய தேவன் எதிர்பார்ப்பது எல்லாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகின்ற உண்மையுள்ள தலைவர்களையே. கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கும் இந்நாட்களில், ஊழியக்காரர்களாகிய நாம் எஜமானின் திராட்சத்தோட்டத்தில் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாகவும், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகின்ற ஊழியர்களாகவும் எழும்பி தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டுவோம்.

முதலாவதாக, நாம் தலைவர்களாக இருப்பது நமக்குக் கிடைத்த உரிமையல்ல, அதை "பாக்கியம்" என்றே கருத வேண்டும். ஆவிக்குரிய உலகில் நல்ல நபர்கள் அநேகர் இருந்தாலும், தேவன் உங்களையும், என்னையும் தலைவர்களாக அவரே தெரிந்துக் கொண்டிருக்கின்றார். இது நம்மிடமுள்ள தகுதியைப் பார்த்து அல்ல. தேவன் நம்மைத் தலைவர்களாக ஏற்படுத்தியதற்கு நீங்களும், நானும் நன்றி உணர்வுள்ளவர்களாயிருக்க வேண்டும். தேவனுடைய திராட்சத்தோட்டத்தில் தலைவராக இருப்பது ஒரு பாக்கியம். அதே நேரத்தில் இது அசாதாரனமான ஒரு காரியமும் கூட. தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிற நாம் அவருக்கு ஊழியம் செய்வதைப் பாக்கியமாகக் கருதி எல்லா நிலைகளிலும் ஊழியம் செய்ய வேண்டும்.

நீங்கள் இந்த செய்தியை வாசிக்கும் முன், லூக்கா 19:11–27 வரை உள்ள வசனங்களில் எழுதப்பட்டுள்ள உவமையினை முழுவதும் வாசித்தால் நலம். இயேசு சொன்ன இந்த உவமையில் மூன்று வித்தியாசமான குணங்களை உடைய தலைவர்களை நாம் அறிந்து கொள்ளலாம். இந்தச் செய்திக்கு ஆதார வசனம் லூக்கா 19:12,13ல் "பிரபுவாகிய ஒருவன்... புறப்படும்போது, அவன் தன் ஊழியக்காரரில் பத்துப்பேரை அழைத்து, அவர்களிடத்தில் பத்துராத்தல் திரவியங்கொடுத்து நான் திரும்பவருமளவும், இதைக்கொண்டு வியாபாரம்பண்ணுங்கள்" என்று சொன்னான். இந்த உவமையில் சொல்லப்பட்டுள்ள ஊழியர்களை இன்று இருக்கக் கூடிய தலைவர்களுக்கு ஒப்பிட்டு சொல்லாம்.

கர்த்தர், நம் ஒவ்வொருக்கும் தாலந்துகளைக் கொடுத்துள்ளார். எபேசியர் 4:10,11ன் படி **"கிருபையாய் நம்மை அழைத்து"**, ரோமர் 12:5–8ன் படி **"ஊழிய வரங்களைக் கொடுத்து"** 1கொரி. 12:4–32ன் படி **"ஆவிக்குரிய வரங்களைக் கொடுத்து"** 2கொரி. 9:8ன் படி **"சுகம், ஜீவன், ஐசுவரியம்"** இவை யாவற்றையும் கிருபையாய்க் கொடுத்துள்ளார்.

லூக்கா 19ம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ள உவமையில், பத்து ஊழியர்களுக்கு பத்துராத்தல் திரவியங்களைச் சமமாகக் கொடுக்கின்றார். அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டு, சிலர் பத்தாகவும், இன்னும் சிலர் ஐந்தாகவும் பெருக்குகின்றனர். ஆனால், ஒரு சிலரோ தேவன் கொடுத்தத் திரவியங்களை வைத்து எதுவும் செய்யவில்லை. இம்மூன்று பிரிவினரில் நீங்களும், நானும் எந்தப் பிரிவில் இருக்கிறோம் என்பதை வேத வசனங்களினால் நம்மை ஆராய்ந்து கர்த்

ளையும் அவனுடனிருந்த வேலைக்காரனால் பார்க்கமுடியவில்லை (2 இராஜா.6:17). அவன் கண்கள் திறக்கப்படும்படி எலிசா விண்ணப்பம் பண்ண வேண்டியதாயிருந்தது. நாமும் சில ஆவிக்குரிய சத்தியங்களைக் கற்று, உணர வேண்டுமானால், நமது ஆவிக்குரியக் கண்களும் திறக்கப்படும்படி ஜெபிக்க வேண்டும். வேதத்தின் அதிசயங்களைப் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும் என்ற தாவீது ராஜாவின் ஜெபம் நமது அனுதின ஜெபமாக வேண்டும்.

**புறாக்கண்கள்:**

உன்னதப்பாட்டில் சூலேமித்தியாளின் கண்களை புறாக்கண்கள் போன்றது என்று வருணிக்கப்பட்டுள்ளன. புறா ஒரு கள்ளங்கபடற்றப் பறவை. அவற்றின் கண்களில் தண்ணீர் நிறைந்திருக்குமாம். அதுபோன்று நம் கண்களில் கனிவு, பரிவு, அன்பு கபடற்ற தன்மை இவை பிரதிபலிக்க வேண்டும். அழுகிறவர்களுடனே அழக்கூடியது இயேசுவின் கண்கள். அழிக்கப்படப்போகும் எருசலேம் நகருக்காக அழுது புலம்பினார் (லூக்கா 19:41). நம்முடைய கண்களில் துயரப்படுவோருக்காக, அழிவை நோக்கிப் போகும் ஆத்துமாக்களுக்காகக் கண்ணீர் உண்டா? நம் தலை தண்ணீராய் கண்கள் கண்ணீராய் (எரேமியா 9:1) நனைந்து ஆத்தும பாரத்தோடு ஜெபிக்கும் நபர்களைத் தேவன் தேடுகிறார். நம்மை அர்ப்பணிப்போமா?

இதுவரை கண்கள் நல்ல அழகானவைகளாக எவ்வாறு செயல்பட வேண்டும் என்று பார்த்தோம். அடுத்து நாம் எவ்விதக் கண்கள் உடையவர்களாக இருத்தல் கூடாது என்று பார்க்கலாம்.

**இச்சைநிறைந்த கண்கள்:**

உலகத்தில் முதல் பாவம் நுழைந்தது கண்கள் மூலம்தான். சாப்பிடக்கூடாத பழம் பார்வைக்கு இன்பமானதாயிருந்ததை ஏவாள் கண்டு, இச்சித்து தேவனது கட்டளையை மீறினாள். கண்களின் இச்சை பாவம் செய்யத் தூண்டும் முக்கியக் காரணி. அதேசமயம் வனாந்திரத்தில் சோதிக்கப்பட்ட இயேசு, உலகத்தின் இராஜ்ஜியங்களையும் மகிமையையும் பார்த்து மயங்கிடாது, அப்பாலே போ சாத்தானே என்று விரட்டியடித்துக் கண்களின் இச்சையை மேற்கொண்டார். நமக்கு வேத புத்தகத்தில் கண்களால் பாவம் செய்து விழுந்த அநேக திருஷ்டாந்தங்கள் உண்டு.

இச்சையினால் மதி இழந்த சிம்சோன் கண்களையும் இழந்து பரிதாபமான விளையாட்டுப் பொருளானான். எவ்வளவு பெரிய அரசனாகிய தாவீது கூட கண்களின் இச்சையால் பயங்கரப் பாவத்திற்குள்ளாகி விழுந்து போனதை மறந்து விடக்கூடாது. கண்களில் மையிட்டுக் கொண்டு பலகணி வழியாய்ப் பார்த்த யேசபேலின் முடிவு மிக பயங்கரம் (இராஜா.9:22,30,37). 2பேதுரு 2:14இல் சொல்லப்பட்ட விபசார மயக்கத்தால் நிறைந்தவைகளும் பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடைய சாபத்தின் பிள்ளைகளாயிராது, பாவத்தைக் காணாத சுத்தக் கண்ணனாகிய இயேசுவின் பிள்ளைகளாய் வாழ்வோமாக. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழும் நாம் இச்சையோடு பார்த்தாலே அது விபச்சாரம் செய்வதற்குச் சமம் (மத்தேயு 5:28) என்பதற்கிணங்க, பரிசுத்த பார்வை, சிந்தையுள்வர்களாய் நடக்க ஜாக்கிரதையாயிருப்போம்.

**மேட்டிமையான கண்கள்:**

கண்களில் அன்பு, பரிவு, தாழ்மை, இரக்கம் போன்ற நற்பண்புகள் வெளிப்பட வேண்டுமேயொழிய மேட்டிமை, இறுமாப்பு, உதாசீனம் போன்றவை வெளிப்படல் ஆகாது. அகத்தில் இருப்





சபையிலும் கர்த்தருடைய ஊழியத்திலும் சீரான வளர்ச்சி இருக்கும்.

யோவான் 13:13–16 மற்றும் பிலிப்பியர் 2:5–10 ஆகிய வசனங்களில், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மைத் தாழ்த்தினது போல இவர்களும் தங்களைத் தாழ்த்துவார்கள். இவர்கள் வெறும் தலைவர்கள் அல்ல. இவர்கள் வேலை செய்யக்கூடிய தலைவர்கள். இவர்கள் எதைச் செய்தாலும் என்ன சொன்னாலும் சுயநலமின்றி தியாகமாய்ச் செயல்படுவார்கள்.

இவர்களுக்குக் கிடைக்கும் பலனை நாம் லூக்கா 19:17,19,24 முதல் 26 வரை உள்ள வசனங்களில் வாசித்துப் பாருங்கள். எஜமான், இருக்கின்ற இவர்களுக்கு இன்னும் அதிகமாகக் கொடுக்கின்றார். நல்லது உத்தம ஊழியக்காரனே என்று அழைக்கின்றார். பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்று கூறுகிறார். ஆம், அன்பு தேவனுடைய பிள்ளைகளே, என்னைக் குறித்தும் உங்களைக் குறித்தும் நம் ஆண்டவர் இப்படியாகவேச் சொல்ல வேண்டும். இதுவே நம்முடைய விருப்பமும் ஜெபமுமாய் இருப்பதாக. நாம் ஒவ்வொருவரும் கடினமாய் ஊழியம் செய்கின்ற வேலைக்காரர்களைப் போல் இருக்க வேண்டும்.

### 3.பிரயோஜனமற்ற ஊழியர்கள்

Hopeless Workers: (லூக்கா 19:20,21)

பிரயோஜனமற்ற ஊழியர்களுக்கு விசுவாசமும் இல்லை, நம்பிக்கையும் இல்லை. எபி11:1ன்படி "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாய் இருக்கிறது". ஊழியம் செய்யக் கூடிய ஒவ்வொருவருக்கும் விசுவாசம் இருக்க வேண்டும். அழைத்தவர் உண்மையுள்ளவர். உண்மையுள்ளவர்கள் என்றெண்ணி இந்தக் கனமான ஊழியத்திற்கு ஏற்படுத்தின எஜமானாகிய இயேசு நாம் செய்யக் கூடிய ஊழியத்திற்கு நிச்சயமாய்ப் பலன் அளிப்பார் என்ற நிச்சயமான விசுவாசம் ஒவ்வொரு ஊழியர்களுக்கும் வேண்டும். பிரயோஜனமற்ற ஊழியர்களாகிய இவர்கள் எஜமான் கொடுத்த ராத்தலை ஒரு சீலையில் கட்டி அப்படியே வைத்து விடுவதை நாம் பார்க்கின்றோம். அவர்களால் தேவனுடைய ராஜ்யத்தில் எந்த ஒரு பலனுமில்லை.

தேவன் கொடுத்த திரவியத்தை வாங்கினார்கள். ஆனால், அதைப் பெருக்கவோ மனதில்லை. இவர்கள் எப்பொழுதுமே வாங்குகிறவர்கள். பிறருக்குக் கொடுப்பவர்கள் அல்ல. இவர்களுடைய எதிர்பார்ப்பெல்லாம் மற்றவர்கள் உழைக்கட்டும் நாங்கள் அவர்கள் பலனை அனுபவிக்கட்டும் என்று இருக்கிறவர்கள். இவர்கள் சுயநலமானவர்கள் தங்களைக் குறித்தே எப்பொழுதும் யோசித்துக் கொண்டே இருக்கிறவர்கள். பாருங்கள் என்ன ஒரு வேதனையான காரியம். எஜமானைக் குறித்துத் தவறான எண்ணங்களும், குறையும் குற்றமும் சொல்லுகிறவர்களாக இருக்கிறவர்கள். இவர்களுக்குக் கிடைக்கக் கூடிய பலன் என்னவென்றால், அவர்களிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படுகிறது.

வேதத்தில் லூக்கா 19:22 முதல் 24 வரை உள்ள வசனங்களில் அவர்களுக்குப் பலன் எதுவுமில்லை என்று எழுதப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஊழியர்களாக நாம் யாரும் இருக்கக்கூடாது. தேவனுடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்யும் ஒவ்வொருவரும் தேவனை நேசித்து, தேவனைப் பிரியப்படுத்த வேண்டும். தேவ சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொருவரையும் தேவனுடைய இராஜ்ஜியத்தில் சேர்க்க, தேவ திட்டம் நிறைவேற்றப்பட செயல்பட வேண்டும். தேவன் அவரவருக்குப் பகிர்ந்து கொடுத்துள்ள தாலந்துகளைத் தேவனுக்காக, அவர் மகிமைக்காகப் பயன்படுத்துவோமாக.

இம்மையிலும், மறுமையிலும் தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக. தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

# அழகும் அலங்கரிப்பும்

## கண்களின் அழகு

பகுதி–8

*Mrs. Nirmala Jeyaraj*

கிறிஸ்துவிற்குள் அன்பானவர்களே, இப்புதிய மாத்திலும் நம்முடைய இயேசு ஜீவிக்கிறார் பத்திரிக்கையின் வாயிலாக உங்களை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி யடைகின்றேன். நாம் "அழகும் அலங்கரிப்பும்" என்ற தலைப்பின் கீழ், நம்முடைய ஆவிக்குரிய மற்றும் சரீர வாழ்விற்குப் பிரயோஜனமானப் பல காரியங்களைக் குறித்துக் கற்றுக் கொண்டு வருகிறோம். இம் மாதத்திலும் கண்களின் அழகு என்ற தலைப்பின் கீழ் தேவனுடைய வார்த்தையையும், ஆலோசனைகளையும் தியானிப்போம்.

### கண்களின் அழகு:

குழந்தை பிறந்ததும் மூக்கும் முழியுமாக நன்றாக இருக்கிறதா ? என்று நம் சமுதாயத்தார் பார்ப்பார்கள். இந்நாட்களில் கண்களை அழகு படுத்த பல வழிமுறைகள் இருக்கின்றது. புருவத்தை வடிவமைத்துக் கொள்வதும், கண்களுக்கு மையிட்டுக் கொள்வதும், செயற்கையான இமைகளை மாட்டிக் கொள்வதும், பல வர்ணங்கள் பூசுவதும் சாதாரணமாகிவிட்டது.

நம் சரீரத்தின் கண்கள், விழிகள், புருவம், இமைகள் போன்றவை இயற்கையாகவே ஒரு சிலருக்கு மிக அழகாக வடிவமைந்துள்ளன. அவற்றை தேவனுடைய பார்வையில் அழகுள்ளதாகக் காத்துக் கொள்ள என்ன வழி என்று பார்ப்போம். சாதாரணமாக ஒருவருடையக் கண்களைப் பார்த்தே அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று ஓரளவு நிதானித்துவிடலாம். நம் இருதயத்தின் உணர்வுகளை (பயம், கவலை, துக்கம், மகிழ்ச்சி) வெளிப்படுத்தும் கண்ணாடிதான் நம் கண்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. கண்கள் எவ்வாறு அழகுள்ளவைகளாகச் செயல்பட வேண்டும் என்று வேதாகமத்தின் அடிப்படையில் பார்க்கலாம்.

### கண் சரீரத்தின் விளக்கு:

மத்தேயு 6:22,23, லூக்கா 11:33–36 ஆகிய வசனங்களில் கண்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில், கண்கள் சரீரத்திற்கு வெளிச்சம் தரக்கூடிய ஒரு விளக்கைப் போன்றது என்று எழுதப்பட்டுள்ளது. கண்கள் நல்லவைகளாக இருந்தால் சரீரம் முழுவதும் வெளிச்சமாக இருக்கும். கண்கள் கெட்டவைகளானால் சரீரம் முழுவதும் இருளடைந்து விடும். நாம் யாவரும் அறிந்தபடி, நம் சரீரத்தின் புறக்கண்கள் மூலம் தான் நம்மைச் சுற்றியுள்ள மனிதரோடும் உலகத்தோடும் தொடர்பு கொள்ள முடிகிறது.

மனிதரின் ஐம்புலன்கள் மூலம் உள்ளான ஆவி, ஆத்துமாவாகிய மனிதனுக்கு அனைத்து செய்திகளும் உள்ளே செல்கின்றன. ***(5 senses are the gates)***. அதற்கேற்றபடி உள்ளான மனிதன் செயல்படுகிறான். ஐம்புலன்களில் கண்களின் முக்கியத்துவத்தை இந்த வசனங்கள் மூலம் புரிந்து கொள்கிறோம். கண்கள் முழு மனிதனுக்கும் வெளிச்சம் தரக்கூடியதாக அமைய வேண்டுமானால் அவைகள் எவ்வாறு செயல்பட வேண்டும் ?

### நேரான பார்வை:

நீதிமொழிகள் 4:25ன்படி கண்கள் நேராய் நோக்க வேண்டும். கண்ணிமைகள் செவ்வையானவைகளைப் பார்க்க வேண்டும். இதின் அர்த்தம் என்ன ? ஒருவரது பார்வை, கண்ணோட்டம், இருதயத்தின் நோக்கங்கள் எண்ணங்கள் அனைத்தும் நல்லதாக, சுத்தமானதாக நேர்மையானதாக இருத்தல் அவசியம். பொறாமை, எரிச்சல், பண ஆசை, கஞ்சத்தனம் போன்றவற்றின் அடிப்படையில் பார்க்கும் கண்களை வன்கண் என்று வேதாகமம் சொல்கிறது. எந்த ஒரு காரியத்தையும் நபரையும் நேர்மறையான கண்ணோக்கோடு பார்க்கப் ***(Positive out look)*** பழகிக் கொள்ள வேண்டும். தவறான நோக்கத்தோடுப் பார்த்தால் தவறாகத்தான் தெரியும் (பச்சைக் கண்ணாடிப் போட்டுப் பார்த்தால் அனைத்தும் பச்சையாகத் தெரிவது போல்). ஒரு சிலருக்கு எதைப்பார்த்தாலும் அதில் உள்ள பாராட்டுதற்குரியவை கண்களில் படாது. குற்றங்கள், குறைவுகள் தான் கண்களில் படும். அதைப் பூதக் கண்ணாடிப் போட்டுப் பார்த்துப் பெரிதாக்குவார்கள். மற்றவர்களிடமும் விமர்சித்து அவர்கள் மனதிலும் பாதிப்பு ஏற்படுத்துவார்கள். எதையும் நடுநிலையாகப் ***(Objective)*** பார்க்கத் தெரிய வேண்டும். அதே சமயம் குறைகள் தென்பட்டாலும் அவற்றைப் பெரிதுபடுத்தாது, தனிப்பட்ட முறையில் சுட்டிக் காட்டி, வளர்ச்சி, முன்னேற்றத்திற்கு ஏதுவாக ஆலோசனைகள் கூறலாம்.

மற்றவர்களை உற்சாகமூட்டி, ஊக்குவித்துக் கட்டும் பணிக்குதான் கர்த்தர் நம்மைப் பயன்படுத்த விரும்புகிறார். இடித்துப்போட அல்ல. குடும்பங்களிலும், வேலை செய்யும் இடங்களிலும் சபையிலும் மற்றவர்கள் வளர முன்னேறக் காரணமாக நாம் பயன்படுவோமாக. தாவீது பாடியது போல் (சங்கீதம் 101:3) தீங்கான காரியத்தை கண்முன் வைக்காதிருப்பது நல்லது.

### மகிழ்ச்சி ஒளிரும் கண்கள்:

கண்கள் உள்ளத்தின் கண்ணாடி என்று பார்த்தோம். இருதயத்தில் கவலைகள், விசாரங்கள், வேதனைகள் நிறைந்திருந்தால் அது ஒருவருடைய கண்களிலே தெரிந்து விடும் (சங். 6:7, 31:9, 88:9). குழிவிழுந்த கண்களை யாரும் விரும்புவதில்லை. நம் கண்கள் அழகான, ஒளிமிளிரும், மகிழ்ச்சி பொங்கும் கண்களாக இருக்க வேண்டுமானால் இருதயத்தில் மகிழ்ச்சி, நிறைவு, சமாதானம் வேண்டும். அதை இயேசு ஒருவர்தான் கொடுக்க முடியும், பரிசுத்த ஆவியானவர் நமக்குள் மகிழ்ச்சியின் ஊற்றாய்ப் பெருக்கெடுத்து நம்மைச் சுற்றியுள்ளவர்களையும் மகிழ்ச்சியால் நிரப்புவார். எனவே, ஆண்டவர் ஒரு மனிதனுக்குள் வாசம் பண்ணும்போது கண்கள் ஒளி நிறைந்த அழகுள்ளவைகளாக அமையும்.

### தெளிவான பார்வை:

இயேசு உலகத்திலிருக்கும் நாட்களில் ஒருபிறவிக் குருடனை சுகமாக்கும் போது முதலில் அவன் மனுஷரை மரங்கள் போல்தான் காணமுடிந்தது. அவன் அது போதுமென்று போய்விடவில்லை. தெளிவானப் பார்வைக்காய் அவரை ஏறிட்டுப் பார்த்தான். கண்கள் தெளிந்து நல்ல பார்வையைப் பெற்றுக் கொண்டான். அரை குறையாக அல்ல, முழுமையான பார்வையை நாம் தேவனிடம் பெற்றுக் கொள்ளுதல் அவசியம். எந்தக் காரியத்திலும் தெளிவு வரும்வரை அவரை ஏறிட்டு நோக்கி ஜெபிப்பதை விட்டு விடக்கூடாது.

### திறக்கப்பட்டக் கண்கள்:

சில நேரங்களில் நம் பார்வை மறைக்கப்பட்டது போலக் காணப்படும் (***Cataract*** போன்று). பவுலின் கண்களிலிருந்து மீன் செதில்கள் போலக் கீழே விழுந்துப் பார்வை தெளிந்தவனானான். எலிசா தீர்க்கதரிசிக்குப் பார்க்க முடிந்த பாதுகாக்கும் அக்கினிமயமான குதிரைகளையும் இரதங்க

தண்டு இல்லாமல் படகில் அமர்ந்து கொண்டு கைகளினால் தண்ணீரை வலிக்கும்பொழுது, வெளிப்படும் ஆற்ற லால் படகானது மெதுவாக நகருகின் றது. அதே நேரத்தில் கையிலுள்ள ஒரு தண்டின் துணை கொண்டு தாங்கும் பொழுது வெளிப்படும் பேராற்றலைக் கொண்டு, படகானது, தண்ணீரைக் கிழித்துக் கொண்டு முன்னேற ஆரம்பிக்கின்றது.

அம்பைத் தனியாகக் கையில் வைத்துக் கொண்டு எறியும்பொழுது அது பாயும் வேகத்திற்கும் தூரத்திற் கும், அதை வில்லில் வைத்து எய்யும் பொழுது அது பாயும் வேகத்திற்கும் தூரத்திற்கும் இடையே பெரிய வித்தி யாசம் உண்டு. பாய்களின் துணை யின்றி படகினால் அலைகளைக் கிழித்துச் சீறிப்பாய முடியுமா ?

ஆற்றலுக்குள் மறைந்துள்ள பேராற் றல் வெளிப்பட வேண்டுமானால், அதற்கு ஒரு ஏற்ற துணையின் பங்க ளிப்பானது மிக மிக முக்கியமாகத் தேவைப்படுகின்றது. படகும் – தண் டும், கணவனும் – மனைவியும், வில் லும் – அம்பும், தனித்தன்மையுடைய இவைகள் எப்பொழுதும் இசைந்தி ருக்க வேண்டியவைகள். இவைகள் இசைந்திருக்கும்பொழுது பிறக்கும் பேராற்றலானது மிகவும் அசாதாரணமா னது. இதற்குமாறாக, தனித்தன்மையு டைய இவைகள் இரண்டும் ஒன்றிற்கு ஒன்று முரண்பட்டுத் தனித்தனியாகப் பிரிந்திருக்கும் பொழுது, வெளிப்படும் ஆற்றலோ, சாதாரணமானது.

அன்று தாவீது பெலிஸ்திய வீரனா கியக் கோலியாத்தை எதிர்கொள்ள இஸ்ரவேலின் பாளையத்திலிருந்துப் புறப்பட்டபொழுது, அவரது கையில் இருந்த ஆயுதங்களைக் குறித்து வேதத்தில், தாவீது தன் தடியைக் கையில் பிடித்துக் கொண்டு, ஆற்றிலி ருக்கிற ஐந்து கூழாங் கல்லுகளைத் தெரிந்தெடுத்து, அவைகளை மேய்ப் பருக்குரியத் தன்னுடைய அடைப்பப் பையில் போட்டு, தன் கவணைத் தன் கையிலே பிடித்துக் கொண்டு, அந்தப் பெலிஸ்தனண்டையிலே போனான் ( 1 சாமு. 17:40) என்று வாசிக்கின்றோம்.

இதற்குப் பின்பு, நடந்த சம்பவத் தைக் குறித்து வேதத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அப்பொழுது அந்தப் பெலிஸ்தன் எழும்பி, தாவீதுக்கு எதிரா கக் கிட்டிவருகையில், தாவீது தீவிர மாய் அந்தச் சேனைக்கும் அந்தப் பெலிஸ்தனுக்கும் எதிராக ஓடி, தன் கையை அடைப்பத்திலே போட்டு, அதி லிருந்து ஒரு கல்லை எடுத்து, கவ ணிலே வைத்துச் சுழற்றி, பெலிஸ் தனுடைய நெற்றியில் பட எறிந்தான். அந்தக் கல் அவன் நெற்றியில் பதிந்து போனதினால், அவன் தரையிலே முகங் குப்புற விழுந்தான். இவ்விதமாகத் தாவீது ஒரு கவணினாலும் ஒரு கல்லினாலும் பெலிஸ்தனை மேற் கொண்டு, அவனை மடங்கடித்து, அவ னைக் கொன்று போட்டான் (1சாமு. 17:48–59) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு கூழாங்கல்லை வெறுமனே கையில் வைத்து எறிவதற்கும் அதைக் கவணில் வைத்து எறிவதற்கும் இடை யிலான வித்தியாசம் மிகவும் பெரியது. அதே கூழாங்கல் மற்றும் அதே கை தான். ஆனால், இப்பொழுது அது ஒரு கவணில் வைத்து எறியப்படுகின்றது. கூழாங்கல்லும், அதற்கு ஏற்ற துணை யாகிய கவணும் தாவீதின் கரத்தில் ஒன் றாக இசைந்திருந்தபொழுது, தாவீதின் கரத்திலிருந்து வெளிப்பட்ட பேராற்றல் மிகவும் அசாதாரணமானது. அந்தப் பேராற்றலுக்கு முன்பாக அரக்கன் நிலைகுலைந்துப் போனான். வெறு மனே கையில் கூழாங்கல் இருப்பதால் மட்டும் அரக்கனை வீழ்த்திவிட முடி யாது. அந்தக் கல் வைத்து எறியப்பட ஒரு கவணின் துணையும் தேவை.





பகுதான் புறத்தில் வெளிப்படும். ஆகை யால், நம் இருதயத்தில் ஆண்டவரது அன்பு, தாழ்மை, இரக்கம் போன்ற நற்குணங்கள் நிறைந்திருக்கும் போது, அவையே நம் கண்களில் வெளிப்படும். நீதிமொழிகள் 21:4; 6:17; சங்கீதம் 131:1 இவற்றின்படி கர்த்த ருக்கு அருவருப்பான மேட்டிமை நிறைந்த கண்கள் நமக்கு வேண்டாம். பரிசுத்த ஆவியினால் தேவ அன்பு நம் இருதயத்தில் ஊற்றப்படும்போது, நம் கண்களின் பார்வையும் அதற்கேற்றபடி மாறிவிடும்.

**திருப்தியற்ற கண்கள்:**

பெண்களாகிய நாம் இதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். ஒரு சிலர் சேலைக் கடைக்குச் சென்றால், அங்கு இருக்கிற அத்தனைப் புடவை களையும் எடுத்துப் போடச் சொல்லிக் கடைசியில் ஒன்றிலும், திருப்தியற்றவர் களாய்க் கடைகடையாய் ஏறி இறங்கு வார்கள். கண்களைத் திருப்திப் படுத்த முடியாது (நீதி.27:20; பிரசங்கி 1:8). ஆகையால், கண்களைக் கட்டுப் படுத்த வேத வசனமாகியக் கலிக்கம் தேவை. குதிரையின் பார்வை நேராய் இருக்கும்படி கடிவாளத்தினால் கட்டப் படுவதுபோல நம் பார்வையும் ஆவி யின் கட்டுப் பாட்டிற்குள் காக்கப்பட வேண்டும். கண்கள் விரும்பியபடி நடந்தால் நாம் சோரம்போகிறவர்களா கிவிடுவோம் (எண்ணாகமம் 15:39). அழிந்து போகிற காரியங்கள் மேல் கண்களைப் பறக்க விடுவானேன். நித்தியத்திற்குரியவைகளுக்கு நேராய் பார்வைத் திருப்பப்பட வேண்டும். கண் இடறலுண்டாக்கினால் அதைப் பிடுங்கி எறியும் வண்ணம், அதைக் கட்டுப்படுத்திக் கண்களின் மேல் வெற்றி பெற வேண்டும்.

முடிவாக, நம் கண்கள் யாரை நோக்க வேண்டும் ? யார்மேல் பதிக்கப் பட வேண்டும் ? தாவீது பாடியது போல், நமக்கு ஒத்தாசைவரும் பர்வத மாகிய கிறிஸ்துவையே நம் கண்கள் எப்பொழுதும் நோக்கிக்கொண்டிருக்க வேண்டும். வேலைக்காரியின் கண் கள் எஜமாட்டியின் கைகளையே நோக்கியிருக்குமாப்போல, என்னு டைய, உங்களுடைய கண்களும், நம் முடைய தேவனாகிய கர்த்தர் நமக்கு இரக்கஞ்செய்யும் வரைக்கும், அவ ரையே நோக்கியிருக்க வேண்டும் (சங்கீதம் 123:1). நமது தேவைகள் அனைத்திற்கும் அவரையே நம்பியி ருக்க வேண்டும். நம் கண்கள் அவர் மேல் பதிக்கப்பட்டவைகளாக இருப்ப தாக. உலகத்தாரைப் பார்த்து சோரம் போக வேண்டாம். விசுவாசத்தைத் துவக்கினவர் அதை முடிக்க வல்லமை யுள்ளவர் (எபி.12:2; சங்.25:15). அவ ரையே நம் முன்னோடியாகவைத்து, நமக்கு நியமித்திருக்கின்ற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடி ஜீவக்கிரிடத் தைப்பெற்றுக்கொள்வோமாக. தொடர்ந்து வருகின்ற மாத பத்திரிக்கையில் உங்க ளைச் சந்திக்கிறேன். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**சமையல் வேலைக்கு – உடனடி தேவை**

கர்த்தருக்குப் பயந்த, ஆவிக்குரிய, அனுபவம் வாய்ந்த **சமையல் வேலைக்கு பெண்கள்** தேவை. தகுந்த சம்பளம் தரப்படும். தங்குமிட வசதி செய்து தரப்படும்.

**ஜெபத்தோட்ட டிரஸ்ட்**, காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம் – 630551.
செல்.9047224066, போன். 04575-232266

# தாய்மை

*Pr. Joshua Estove, Rameswaram* பகுதி-13

தன்னைப்பற்றிய தேவசித்தம் என்ன என்பதை அறிந்து அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, அதற்குக் கீழ்ப்படிய தன்னை ஒப்புக்கொடுக்காமல், தனது சுயவிருப்பங்களை நாடிச் செல்லும் பேரழகு எப்படிப்பட்டதாயிருந்தாலும் சரி அது தேவனுடைய பார்வையில் அலங்கோலமே! இதனால்தான் மதிகேடாய் நடக்கிற அழகைக் குறித்து வேதத்தில், மதிகேடாய் நடக்கிற அழகுள்ள ஸ்தரீ, பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்குச் சமானம் (நீதி. 11:22) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் காரியத்திற்கு முற்றிலும் மாறாக, தனது சுயவிருப்பங்களை நாடாமல், தன்னைப்பற்றிய தேவசித்தம் என்ன என்பதை அறிந்து, அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு, அதற்குக் கீழ்ப்படியத் தன்னை ஒப்புக்கொடுக்கும் அலங்கோலம் எப்படிப்பட்டதாக இருந்தாலும் சரி, அது தேவனுடைய பார்வையில் பேரழகே!

ஏற்கனேவ திருமணம் முடிந்தவர்கள், இந்த இரகசியங்கள் எனக்கு முன்பே தெரியாமற்போய் விட்டதே. தெரிந்திருந்தால், நான் இப்பொழுது திருமணம் செய்திருக்கின்ற இந்த நபரைத் தெரிந்து கொள்ளாமல் இருந்திருப்பேனே (?!) இப்பொழுது நான் என்ன செய்ய ? என்ற உங்களது அங்கலாய்ப்பைத் தூக்கித் தூர வீசுங்கள். இந்தக் காரியங்களெல்லாம் முன்னமே உங்களுக்குத் தெரியாதிருந்ததற்காகவும் கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள். எனக்குத் தெரியாமலேயே நடந்த இந்தக் காரியங்களெல்லாம் என் வாழ்வில் சரியாகவே நடந்திருக்கிறது என்பதை விசுவாசியுங்கள். தேவனே நான் உம்மை அறியாதிருந்த நாட்களிலேயே நீர் எனக்காகத் தெரிந்தெடுத்துக்கொடுத்த மனைவிக்காக அல்லது கணவருக்காக உமக்கு ஸ்தோத்திரம் என்று சொல்லுங்கள்.

பின்பு, தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல. ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். தேவனாகிய கர்த்தர் வெளியின் சகல வித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்னப் பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டு வந்தார். அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப்பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று. அப்படியே, ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவித காட்டு மிருகங்களுக்கும் பேரிட்டான். ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை.

அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரையடைந்தான். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். அப்பொழுது ஆதாம் இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள். இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள் (ஆதி. 2:18,19).





தாம் படைத்த அனைத்தையும் ‘நல்லது’ என்று கண்ட தேவனாகிய கர்த்தர் மனிதன் தனிமையாயிருப்பதை மட்டும் ‘நல்லதல்ல’ என்று கண்டிருக்கிறார். மனிதனுக்கு ஒரு மனுஷியை அவர் உண்டாக்குவேன் என்று சொல்லாமல், மனிதனுக்கு ‘ஏற்ற துணையை’ உண்டாக்குவேன் என்றே சொல்லியிருக்கின்றார். மேலும் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே ‘இசைந்திருப்பான்’ என்றும் சொல்லியிருக்கின்றார். இந்தக் காரியங்களுக்குள் மறைந்துள்ள தேவஞானம் மகா ஆழமானது!

அன்று தோட்டத்தில் தேவன் மனிதனோடு இருந்தார். மனிதனும் தேவனோடு இருந்தான். தனிமையாயிருக்கின்ற மனிதனுக்குத் தேவனுடைய துணை மட்டும் போதுமென்றால், அவன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று ஏன் தேவன் அவனைக் குறித்துச் சொல்ல வேண்டும் ? மனிதன் ஏன் தனியாக இருக்கக்கூடாது ? அவன் வாழ்வில் அவனுக்காகவே உண்டாக்கப்பட்ட ஒரு ஏற்ற துணையின் பங்கு என்ன ? கணவன் மனைவியும் ஏன் இசைந்திருக்க வேண்டும் ?

**பிரிந்திருக்க வேண்டியவர்கள் சேர்ந்திருக்கக்கூடாது என்பது எந்தளவிற்கு முக்கியமோ அதேயளவிற்குச் சேர்ந்திருக்க வேண்டியவர்கள் பிரிந்திருக்கக்கூடாது என்பதும் முக்கியம்.** சேர்ந்தே இருக்கும்படித் தெரிந்துக் கொள்ளப்பட்ட சிலவிஷயங்களை நம்மால் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்க முடிவதில்லை. அவைகள் எதனோடு இசைந்திருக்க வேண்டுமோ அதனோடு மட்டுமே இசைந்திருக்க வேண்டும். அப்பொழுது மட்டுமே தேவனுடைய பேராற்றலானது அவைகள் வழியாக முழுஅளவில் வெளிப்படும். ஆனால், அவைகள் இவ்வாறு இசைந்திருக்க மறுத்துத் தனித்திருக்க முயற்சிக்கும் பொழுதோ, தேவனுடையப் பேராற்றலானது அவைகள் வழியாக முழு அளவில் வெளிப்படாமல் வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றது. மட்டுப்படுத்தப்பட்டதொரு வல்லமையைக் கொண்டு பெரிதாக எதையும் சாதிக்க நம்மால் முடியாதே.

தம்பதிகளைக் கொண்டுச் சாதிப்பதற்கானப் பேராற்றல் கிறிஸ்துவிடம் இருந்தும் அது பல குடும்பங்கள் வழியாக வெளிப்படாதிருப்பதற்கு, எப்பொழுதும் இசைந்திருக்க வேண்டியத் தம்பதியர்கள் ஒருவரோடொருவர் இசைந்திராமல், முரண்பட்டு ஒருவரையொருவர் விட்டுத் தனித்தனியாகப் பிரிந்திருப்பதேக் காரணம். இந்தக் காரியங்களை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள நான் உங்களுக்குச் சில உதாரணங்களைத் தர விரும்புகின்றேன்.

உயரம் தாண்டுதலை எடுத்துக் கொள்ளுங்கள். தன்னைவிடப் பலமடங்கு உயரமானதொரு காரியத்தைத் தாண்டும் பேராற்றல் மனிதனுக்கு உண்டு. ஆனால் அதைத் தனியாகச் செய்ய அவனால் முடியாது. அந்தக் காரியத்தில் அவனுக்குத் துணை செய்ய ஒரு நீளமான கம்பு தேவை. நீளமான கம்புக்கு என்று எந்தவொரு ஆற்றலும் கிடையாது. இவனது ஆற்றல் தான் அந்தக் கம்பின் வழியாகப் பாய்ந்து, அதே கம்பின் வழியாக பேராற்றலாக வெளியேறி அவன் மேலெழும்ப அவனுக்குத் துணை செய்து விடுகின்றது.

லண்டன் ஜூலை9:பிரிட்டன் பார்லிமென்ட்டுக்கு எதிரே உள்ள வளாகத்தில் தேச தந்தை மகாத்மா காந்தியடிகளுக்கு சிலை வைக்க பிரிட்டன் அரசு முடிவு செய்துள்ளது.

வாஷிங்டன் ஜூலை10: பிரிட்டனின் டெர்பிஷயர் பகுதியில் உள்ள, ஒரு குகையில் இருந்து 2000 ஆண்டுகளுக்கு முந்தைய, ரோமானிய மற்றும் இரும்பு கால நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இருவேறு நாகரீகங்களை சேர்ந்த நாணயங்கள், ஒருவேர கிடைத்திருப்பது அதுவே முதல் முறை.

வாஷிங்டன் ஜூலை 11:திருச்சி அரசு இன்ஜினியரிங் கல்லூரியில் படித்த நாக நாதன் 58, அமெரிக்காவின் டொலிடோ பல்கலைக் கழகத்தின் தலைவராக தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளார்.

## விளையாட்டு செய்திகள்

போர்டோ அல்கிரே ஜூலை 2:உலகக் கோப்பை கால்பந்து தொடரின் காலிறுதியில் ஐரோப்பாவின் ஜாம்பவான் அணிகளான ஜெர்மனி– பிரான்ஸ் மோத உள்ளன. முன்னதாக நடந்த ரவுண்டு –16 போட்டியில் ஜெர்மனியிடம் தோற்ற அல்ஜீரியா தொடரில் இருந்து வெளியேறியது.

டெர்பி ஜூலை3:டெர்பிஷயர் அணிக்கு எதிரான இரண்டாவது பயிற்சிப் போட்டியில், இந்திய அணியின் புஜாரா அரை சதம் கடந்தார்.

லண்டன் ஜூலை 4: விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு பைனலுக்கு, கனடாவின் பவுச்சர்டு, செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவா முன்னேறினார்.

பிரேசிலியா ஜூலை 5:உலகக் கோப்பை காலிறுதிப் போட்டியில் இன்று அர்ஜென்டினா,பெல்ஜியம் அணிகள் மோதுகின்றன. இதில் மெஸ்சி, ஏஞ்சல்டிமரியாவை நம்பி களமிறங்கும் அர்ஜென்டினா சாதிக்க அதிக வாய்ப்பு உள்ளது.

பிரேசிலியா ஜூலை6:உலகக் கோப்பை அரையிறுதிக்கு அர்ஜென்டினா அணி அசத்தலாக முன்னேறியது. காலிறுதியில் பெல்ஜியத்தை 1–0 என்ற கோல் கணக்கில் சுலபமாக வீழ்த்தியது.

லண்டன் ஜூலை7:விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். நேற்று நடந்த பரபரப்பான பைனலில் சுவிட்சர்லாந்தின் ரோஜன் பெடரரை தோற்கடித்தார்.

பிரிஸ்பேன் ஜூலை8: ஆஸ்திரேலியா 'ஏ' அணிக்கு எதிரான முதலாவது டெஸ்டில், நமன் ஓஜா இரட்டை சதம் அடித்து கை கொடுக்க, முதல் இன்னிங்சில் இந்திய அணி475 ரன்கள் குவித்தது. இந்திய பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் ஆஸ்திரேலிய அணி திணறுகிறது.

பிரஸ்சல்ஸ் ஜூலை9:உலக கோப்பை காலிறுதிக்கு முன்னேறிய பெல்ஜியம் அணி வீரர்களுக்கு அந்நாட்டு மன்னர் சார்பில் சிறப்பான வரவேற்பு தரப்பட்டது.

பெலோ ஹரிஜான்டே ஜூலை10:உலக கோப்பை தொடரை நடத்திய பிரேசில் மிகப்பெரும் அதிர்ச்சியை சந்தித்தது. அரையிறுயில் ஜெர்மனியிடம் 1–7என்ற கோல்கணக்கில் படுதோல்வி அடைந்து வெளியேறியது. ஜெர்மனி பைனலுக்கு முன்னேறியது.





# ஜெபக் குறிப்புகள்

**கீழ்க்கண்ட குறிப்புகளுக்காக ஜெபிக்கவும்**

1. அல்லேலூயா டவர், மதுரை நல்ல சமாரியன் ஆலய ஊழியங்களுக்காக, போதகர்களுக்காக, அவர்கள் ஊழியங்களுக்காக, குடும்பங்களுக்காக
2. நல்ல சமாரியன் ஐக்கிய கிளை சபை ஊழியர்களுக்காக, சபைகளுக்காக, விசுவாசிகளுக்காக.
3. யாகேல் பெண்கள் ஜெபக்குழுவிற்காக, மருத்துவமனை ஊழியங்களுக்காக, கிராம ஊழியங்களுக்காக, சிறுவர் ஊழியங்களுக்காக
4. அல்லேலூயா டவரில் விசேஷ வேதபாட வகுப்பு கிருபையும் விசுவாசமும் (Grace & Faith) Pr.டேவிஸ் அக்டோபர் 14 – 19.
5. ஆகஸ்ட் 31 முதல் செப்டெம்பர் 7 வரை நடைபெறும் ஸ்தோத்திரப் பெருவிழாவிற்காக. (Pr.லூக்காசேகர், Pr.ஜாய், Eva.ரீகன் கோமஸ், Pr.Y.வெஸ்லி, Pr.ஜான் ஜெபராஜ், Pr.ஜெயசீலன்).
6. சென்னை, ஓசன்னா டவர், Praise Tower, ஊழியங்களுக்காக, Pr.டேனியல் ஆஸ்பார்ன், Pr.தாம்சன், Pr.ஜார்ஜ் இராபர்ட் இவர்களின் குடும்பங்களுக்காக,
7. ஏற்கனவே இடம் வாங்கப்பட்டுள்ள இடங்களில் ஆலயம் கட்டப்பட (அருப்புக்கோட்டை, கம்பம் கூடலூர், பாளையம்கோட்டை, திருப்புவனம், பனகுடி...), பொங்கலூர், நிலக்கோட்டை போன்ற இடங்களில் இடம் வாங்கப்பட
8. அனைத்து மிஷனரி ஊழியங்களுக்காக, மிஷனரி ஸ்தாபனத் தலைவர்களுக்காக *(IGM, ICGM, CGMM, GEMS, IMS, CMS, IET, BYM, FMPB, Shalom)*
9. ஜெபத்தோட்ட ஊழியங்களுக்காக *(Fr.S.J.*பெர்க்மான்ஸ்), பெராக்கா தீர்க்கதரிசன ஊழியங்களுக்காக (*Bro.*எசேக்கியா பிரான்சிஸ், *Sis.*பெனிட்டா பிரான்சிஸ்), இயேசு அழைக்கிறார் ஊழியங்களுக்காக (*Dr.*பால் தினகரன், *Mrs.*ஸ்டெல்லா தினகரன்)
10. *Blessing TV, God TV* போன்ற அனைத்து *T.V* ஊழியங்களுக்காக, *Local TV Channels* மூலமாக சத்தியம் எல்லா இந்திய மொழிகளிலும் அறிவிக்கப்பட
11. இஸ்ரவேல் தேசத்தின் சமாதானத்திற்காக, இலங்கை தேச எழுப்புதலுக்காக, இந்திய தேச எழுப்புதலுக்காக, அகில உலக எழுப்புதலுக்காக.

## போதகர் பங்கேற்கும் கூட்டங்கள்

- ஜூலை 16 – ஆகஸ்ட் 26 (Canada, USA) ஆகிய நாடுகளில், செப். 9 –28 (UAE, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து) Pr.S.ஜோசப் பாலசந்திரன் மற்றும் Pr.சாக்ராபர்ட் செய்யும் ஊழியங்களுக்காக.
- அக்.2, உபவாச விடுதலை முகாம் (செய்தி: Pr.காலேப் ஜெயக்குமார் & Pr.S.ஜோசப் பாலச்சந்திரன்).
- அக்.10,11,12 குடும்ப ஆசீர்வாதப் பெருவிழா. *(Shalom Ministries - Bro. Rajasing & Team).*
- பீஹார் (GEMS) ஊழியங்களுக்காக, Sikaria Visit, Chatra Crusade & Fr.பெர்க்மான்ஸ், Pr.S.ஜோசப் பாலச்சந்திரன் & குழுவினருக்காக.

**ஜெபியுங்கள்...**

# செய்தி சோலை



## உள்நாட்டு செய்திகள்

சென்னை ஜூலை2:இந்திய இலங்கை ஒப்பந்தப்படி கச்சத்தீவுக்கு மீனவர்கள், யாத்திரீகர்கள் செல்லலாம் கச்சத்தீவில் இந்திய மீனவர்களுக்கு மீன்பிடி உரிமை வழங்கப்படவில்லை என சென்னை உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது. இவ்வழக்கு விசாரனை இரண்டு வாரங்களுக்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி ஜூலை3: பேயை ஓட்டுவதாகக் கூறி முதியவரின் தலையில் அடிக்கப்பட்ட 3இன்ச் ஆணியை நெல்லை மருத்துவ கல்லூரி மருத்துவமனை டாக்டர்கள் அகற்றினர்.

புதுடில்லி ஜூலை4: நாட்டின் அதிவேக ரயிலின் சோதனை ஓட்டம், நேற்று வெற்றிகரமாக நடைபெற்றது. மணிக்கு 160கி.மீ. வேகத்தில் இயக்கப்பட்ட இந்த ரயில் டில்லியிலிருந்து 99 நிமிடத்தில், ஆக்ரா நகர் சென்றடைந்தது. இது ரயில்வே துறை யில் மற்றொரு சாதனையாகக் கருதப்படுகிறது.

புதுடில்லி ஜூலை5: சமையல் ‘காஸ்’ விலையை சிலிண்டர் ஒன்றுக்கு, 250 ரூபாய் உயர்த்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதேபால் மண்ணென்ணெய் விலையையும் லிட்டருக்கு நான்கு ரூபாய் உயர்த்தவும் முடிவு செய்துள்ளது. விலை உயர்வை நடைமுறைப் படுத்தும்படி, மத்திய அமைச்சரவைக்கு பெட்ரோலிய அமைச்சகம் விரைவில் பரிந்துரை அனுப்ப உள்ளது.

சென்னை ஜூலை 6:சென்னை போரூர் மவுலிவாக்கத்தில் இடிந்து விழுந்த 11 மாடி கட்டிடத்தில் மீட்பு பணிகள் முடிந்ததைத் தொடர்ந்து, அந்தப் பகுதி இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.

திருநெல்வேலி ஜூலை 7: நெல்லையில் தாமிரபரணி ஆற்றின் ஜீவாதாரத்தை உறிஞ்சி, குடிநீர் பாட்டில் தயாரிக்கும், பெப்சி நிறுவன ஆலை துவங்கப்படுவதற்கு விசவாயிகள் சங்கத்தினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

புதுடில்லி ஜூலை 8: ரயில்வே அமைச்சர் சதானந்த கவுடா இன்று பார்லிமென்டில் தன்முதல் ரயில்வே பட்ஜெட்டை தாக்கல் செய்கிறார். இந்தப் பட்ஜெட்டில் ரயில்வே துறையை நீவன மயமாக்கத் தனியார் முதலீட்டிற்கு பச்சைக்கொடி காட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் பல புதிய திட்டங்கள் குறித்த அறிவிப்புகளும் வெளியாகின்றன.

மதுரை ஜூலை9: காலம், காசு ஆகியவற்றை செலவழித்து நகரங்களுக்கு செல்லாமல், அவரவர் கிராமங்களிலேயே பாஸ்போர்ட் பெறுவதற்குப் பதிவு செய்யும் முறை அறிமுகம் ஆக உள்ளது.

புதுடில்லி ஜூலை 11:உறுதியான முதலீட்டு சூழலை உருவாக்கி, பொருளாதர வளர்ச்சியை அதிகரிப்பதே தங்கள் இலக்கு என்று பா.ஜ. தலைமையிலான மத்திய அரசு தன் முதல் நிதிநிலை அறிக்கை மூலம் முதலீட்டாளர்களுக்கும், தொழில் முனைவோருக்கும் தெரிவித்துள்ளது.





புதுடில்லி ஜூலை10: நேஷனல் ஹெரால்டு பத்திரிக்கை நிறுவனத்தின் சொத்துக்களை அபகரித்ததாக எழுந்துள்ள குற்றச்சாட்டில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு வருமானவரித்துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இதற்கு “நரேந்திரமோடி” தலைமையிலான பா.ஜ. அரசு என்னையும் காங்கிரஸ் தலைவர்களையும் பழிவாங்கும் நோக்கத்துடன் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது என சோனியா குற்றம் சாட்டியுள்ளார்.

திருப்புவனம் ஜூலை13:ஒருவகை தாவரகாயிலிருந்து ‘நானோ இன்சுலின் வாட்டர் மூலம்’ சர்க்கரை நோயை கட்டுப்படுத்தலாம் என திருப்புவனம் பட்டதாரி வாலிபர் நேசமணி முயற்சி செய்துள்ளார்.

## வெளிநாட்டு செய்திகள்

ஜெருசலம் ஜூலை2: இஸ்ரவேல் நாட்டின் கட்டுப்பாட்டில் உள்ள மேற்குகரைப் பகுதியில், யூத மத கல்விக் கூடத்திலிருந்து வெளியே வந்தபோது, கடந்த மாதம் மர்ம நபர்களால் கடத்தப்பட்ட இரு சிறுவர் உட்பட மூன்று பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் உடல்கள் நேற்று முன்தினம் இரவில் கைப்பற்றப்பட்டன. கொலைகாரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறினார்.

லாஸ் ஏஞ்சலஸ் ஜூலை3:வெளிநாட்டு பயரங்கரவாத அமைப்புக்கு உதவி செய்த குற்றத்திற்காக, கடந்த ஆண்டு லாஸ் ஏஞ்சலசைச் சேர்ந்த, சின்வின்கோ கியூயன் 25 என்னும் ஹசன் அபு ஓமர் என்பவர் கைது செய்யப்பட்டார்.

வாஷிங்டன் ஜூலை4:இந்தியாவுக்கு அதி நவீன ஹார்பூன் ஏவுகனைகள் வழங்கப்பட உள்ளன என அமெரிக்க பார்லிமென்டிற்கு, அந்நாட்டின் ராணுவ தலைமையகமான ‘பென்டகன்’ தகவல் தெரிவித்துள்ளது.

சிங்கப்பூர் ஜூலை5: இந்தியா–சிங்கப்பூர் இடையே தொழில் வர்த்தகத்தை வலுவாக்க, சிங்கப்பூர் அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது என சிங்கப்பூர் வெளியுறவு மற்றும் சட்டத்துரை அமைச்சர் சண்முகம் தெரிவித்தார்.

ஜகார்தா ஜூலை 6:இந்தோனேசியாவில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. எனினும் இந்த நில நடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை.

துபாய் ஜூலை7: ஈராக்கில் பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மீண்டு, நேற்று முன்தினம் நாடு திரும்பிய கேரள மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த 46 நபர்களுக்கு வேலை வழங்க, ஐக்கிய அரபு குடியரசு நாடுகளில் மருத்துவமனைகள் நடத்தி வரும் இந்தியரான டாக்டர்.பி.ஆர்.ஷெட்டி முன் வந்துள்ளார்.

ஹனோய் ஜூலை8: தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான வியட்நாமில் நேற்று பயிற்சியில் ஈடுபட்டிருந்த ராணுவ ஹெலிகாப்டரில் திடீரென இயந்திர கோளாறு ஏற்பட்டு கிராமம் ஒன்றில் விழுந்து நொருங்கியதில் அதிலிருந்த ராணுவவீரர்கள் 16 பேர் இறந்தனர்.